வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 10.11.2022 வியாழக்கிழமை இதழ் : 337 பக்கங்கள் : 16

# பாராளுமன்றத்தில் தவறு காண ஜனாதிபதிக்கு உரிமை இல்லை!

## எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனம்

கொழும்பு, நவம்பர் 10

பாராளுமன்றத்தில் குறை காண்பதற்கு நிறைவேற்ற அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு உரிமை இல்லை என்று எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டினர். 15

## குரங்கு அம்மை 2ஆவது நபரும் அடையாளம்!

கொழும்பு, நவ. 10

குரங்கு அம்மை தொற்றுக்கு உள்ளான இரண்டாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 15



## இலங்கை வந்தார் இங்கிலாந்தின் வர்த்தக தூதுவர்!

லண்டன், நவ. 10

இலங்கைக்கான இங்கிலாந்து வர்த்தகத் தூதுவர் லோர்ட் டேவிஸ் பிரபு அபர்சோக் மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று நாட்டை வந்தடைந்தார்.

வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கில் லோர்ட் டேவிஸ் பல்வேறு வர்த்தக 15

## 81 மாணவர்கள் போதைக்கு அடிமை

### மூவர் 14 வயதுக்கு உட்பட்டோர்

கொழும்பு, நவ. 10

கடந்த 9 மாதங்களில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 81 பாடசாலை மாணவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவர்களில் மூவர் 14 வயதுக்கு உட்பட்டவர்கள், மிகுதி 78 பேர் 15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் அத் 15

## எம். சி. சி. ஒப்பந்தம் குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 10

மிலேனியம் சவால் கோர்ப்பரேஷன் (எம். சி. சி.) ஒப்பந்தம் மூலமாக உதவி திட்டங்களைப் பெற எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் முடிவு செய்தது.

எப்படி இருப்பினும் இது விடயத்தில் என்ன முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கும் உரிமை புதிய அர 15

### கொழும்பு துறைமுகத்தின்

## மேற்கு முனையத்தின் நிர்மாண பணி ஆரம்பம்!

கொழும்பு, நவ. 10

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் நேற்றுப் புதன் கிழமை ஆரம்பமாகின.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இந்தப் பணிகள் ஆரம்பமாகின.

இந்தியாவின் அதானி குழுமத்தின் முதலீட்டின் கீழ் மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கொழும்பு 15

## 3 வயது குழந்தையை கொடூரமாக தாக்கினார்!

### தந்தையை கைது செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 10

ஊர்காவற்துறையில் 3 வயது பச்சிளம் குழந்தையை கொடூரமாக தாக்கியதோடு தனது மனைவிக்கு மரண அறிவித்தலை வட்ஸ் அப்பில் வெளியிட்டவரை கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, 15

## ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தை இதுவரை பகிரங்கப்படுத்தாதது ஏன்?

### எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

கொழும்பு, நவ. 10

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஊழியர்மட்ட இணக்கப்பாடு தொடர்பான அறிக்கைகளை ஏன் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.



நேற்று புதன் கிழமை 15

## அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒற்றுமையாகும் கட்டம் வரும்!

### விக்னேஸ்வரன் எம். பி. நம்பிக்கை



யாழ்ப்பாணம், நவ. 10

எங்களுக்குள் ஒற்றுமை இல்லாததாலேயே தமிழரின் அரசியல் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலையுள்ளது. வெகுவிரைவில் தற்போதைய நிலையைப் பார்த்து - சூழலைப் பார்த்து - பின்புலத்தைப் பார்த்து நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக வேண்டிய கட்டம் வரும்.

- இப்படி கூறியிருக்கிறார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் 15

## 26,000 அரச சேவை பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்குள் ஈர்க்க முடிவு

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, நவ. 10

தற்போது அரச சேவையில் உள்ள பட்டதாரிகளுக்கு டிசெம்பர் மாத நடுப்பகுதியில் பொது பரீட்சை ஒன்றை நடத்தி அவர்களை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நமது மக்களின் வெளிநாட்டு மோகம் தொடர்பாக முன்னரும் பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றேன்.

வடக்கு - கிழக்கில் யாரைக் கேட்டாலும் வெளிநாடு போவதையே தமது விருப்பமாகக் கொண்டிருப்பர். அதற்கு பல காரணங்கள் உண்டு. அவை பற்றிப் பேசுவதெனில் இந்தப் பத்தி போதுமானதல்ல.

இன்று மேற்கு நாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு பலரும் பல்வேறு வழிகளில் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

சட்டவிரோதமாக என்பது, இங்கே விளக்கித்தான் நம்மவர்களுக்கு புரிய வேண்டுமென்பதல்ல.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு இவ்வாறு சட்டவிரோதமாக செல்வதற்கு பல இட்சங்களை, அண்ணளவாக அறுபது இலட்சங்களை செலவிடுவதற்கும் பலர் தயாராக இருக்கின்றனர்.

அதுவே கனடாவுக்கென்றால் ஒரு கோடியை செலவு செய்யவும் சிலர் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், குறைந்த செலவில் அவுஸ்திரேலியாவுக்கோ அல்லது கனடாவுக்கோ பயணம் செய்ய நம்மவர்கள் பயங்கரங்கள் நிறைந்த ஆபத்தான பயணங்களை செய்தேனும் சிறிய தொகையில் செல்வதற்கு தயங்குவதில்லை.

யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் இதுபோன்ற ஆபத்தான பயணங்களைச் செய்தென்றாலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறிய போது அதில் நியாயம் இருந்தது. இங்கே இருந்தாலும் நமது வாழ்க்கை நிச்சயமற்றது என்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருந்த நம்மவர்கள், ஆபத்துநிறைந்த கப்பல் பயணத்தின் மூலமாகவாவது தப்பிக் கரைசேர்ந்தால் அதன்பின்னராவது ஆபத்தின்றி வாழலாம் என்று கருதினார்கள். ஆனால், இன்றும் அந்த ஆபத்துமிக்க பயணத்தை தெரிவு செய்து அவுஸ்திரேலியாவுக்கோ அல்லது கனடாவுக்கோ பயணம் செய்யவேண்டுமா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

கனடாவுக்கு செல்வதற்காக சிறிய மீன்பிடிப் படகு ஒன்றில் சில பத்துப் பேரல்ல, முந்நூறுக்கும் அதிகமானவர்களை ஏற்றிக்கொண்டு கனடாவுக்கு சென்ற படகு ஒன்று கடலில் மூழ்கிக்கொண்டிருந்தபோது ஜப்பான் கடற்படையினரால் மீட்கப்பட்டு அதில் இருந்த முந்நூறு பேரும் மீட்கப்பட்ட செய்தியை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

இந்தப் படகிலிருந்து அகதிகளை மீட்கின்ற காட்சிப் படங்கள் பல இணையங்களிலும் செய்திகளிலும் வெளிவந்திருந்தன.

ஊர்காவற்றுறை துறைமுகத்திலிருந்து அனலைதீவுக்கு போவதுபோல எண்ணிக்கொண்டு அவர்கள் ஏறியிருக்கலாம்.

அது அல்ல நம் இங்கே சொல்ல வருவது. இந்தக் கடல் பயணத்தின் பின்னால் நடக்கும் பாரிய மோசடி பற்றியே எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு கப்பலில் பயணிப்பதற்கு ஒவ்வொருவரும் சுமார் இருபது இலட்சங்களை செலுத்துகின்றனர்.

அவ்வாறு செலுத்துகின்றவர்களை வீசாகூட இல்லாமல் பயணிக்கக்கூடிய ஏதாவது ஒரு நாட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து இவ்வாறு சிறிய படகுகளில் ஏற்றி அனுப்பி விடுகின்றனர் இந்த பயணங்களை ஏற்பாடு செய்கின்ற முகவர்கள்.

அவ்வாறு பணத்தை வாங்குகின்ற முகவர்களே, கப்பல் புறப்பட்ட சில மணி நேரங்களில் அந்த நாட்டு கடற்படைக்கு தகவல்கொடுக்க அவர்கள் அவர்களை மீட்டு - கைது செய்துவிடுகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள், பின்னர் பல சட்ட சிக்கல்களை எதிர்கொள்வதோடு மீண்டும் வீடு திரும்பி விடுகின்றனர்.

இந்தப் பின்னணியில் நடக்கும் பாரிய மோசடி பற்றி யாரும் பேசுவதாகத் தெரியவில்லை.

ஜப்பான் கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட அந்தக் கப்பலில் இருந்து தலைக்கு பல இலட்சம் கொடுத்து ஏறிச் சென்ற முந்நூறு பெரும் மீட்கப்பட்டனர். அவர்களை தாயகம் அழைத்துவர இலங்கை வெளிநாட்டமைச்சு ஏற்பாடு செய்கின்றது என்ற செய்திகள் வருகின்றனவே தவிர, இந்த பயணத்துக்கு ஏற்பாடு செய்து, அவர்களிடம் பல கோடிகளை கொள்ளையடித்தவர்கள் பற்றிய எந்த தகவலும் இல்லை.

இந்த முந்நூறுபேரிடமும் அறிவிடப்பட்ட அறுநூறு மில்லியனுக்கும் அதிகமான பணத்தில் ஒரு சில மில்லியன் ரூபாயை செலவிட்டு அந்தக் கப்பலை வாங்கியதுபோக மிகுதிப் பணத்தை கொள்ளையடித்தவர்களை யாரும் கண்டுகொண்டதாக தெரியவில்லை.

இந்த மோசடி குறித்து - நம்மவர்கள் விழித்துக்கொள்ளவில்லை என்றால், இதுபோன்ற துயர்கள் தொடர்வதை யாராலும் தடுக்கமுடியாது.!

**- ஊர்க்குருவி**

### முல்லைத்தீவில் தொடரும் மழை

# வெள்ளத்தில் மூழ்கிய வீதிகளால் மக்களின் போக்குவரத்து பாதிப்பு

முல்லைத்தீவு, நவ. 10

நந்திக்கடல் வட்டுவாகல் மற்றும் சாலை கடல் நீர் ஏரிகள் மழைவெள்ளத்தால் நிரம்பி காணப்படுகிறது. இதனால் அப்பகுதியின் வீதிகளால் போக்குவரத்து செய்வதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை வெள்ளம் காரணமாக நந்திக்கடல் நீர் ஏரி நிரம்பியுள்ளதால் வட்டுவாகல் பாலத்திற்கு மேலாக வெள்ளநீர் வழிந்தோடிவருகின்றது இதனால் இந்தப் பாலம் ஊடாக போக்குவரத்து செய்வதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

இதேவேளை சாலை கடல் நீர் ஏரியும் மழைவெள்ளத்தால் நிரம்பி காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

இரட்டைவாய்க்கால் - சாலை வீதியில் மழைவெள்ளம் நிரம்பி காணப்படுகின்றது சுமார் 5 கிலோமீற்றர் தூரத்துக்கு வெள்ள நீர் காணப்படுவதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை,மாத்தளன் மக்களின் போக்குவரத்து மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாய செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் மழைவெள்ளம் காணப்படுவதால் வட்டுவாகல் பாலத்தையும் சாலை முகத்துவாரத்தையும் உடனடியாக வெட்டிவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதேவேளை வட்டுவாகல் கடல் வெட்டுவது தொடர்பில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் கொண்ட குழுவின் தீர்மானத்துக்கு அமையவே வெட்டப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சீரற்ற காலநிலையால் மூன்று வீடுகள் பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் டி. என். சூரிய ராஜா தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பரவலான மழை பெய்தது. இதனால், மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. மறவன்புலவு (ஜே/298), வரணி வடக்கு (ஜே/339), வடலியடைப்பு (ஜே/145) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலேயே குறித்த பாதிப்புகள் இடம்பெற்றுள்ளன என்று தரவுகள் மூலம் அறிய வருகின்றது. (ஐ)

# போதைப் பொருட்கள் கடத்தலை சோதனையிடலால் தடுக்கமுடியாது!

### சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் வீதி சோதனை சாவடிகளை அமைத்து போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த முடியாது என ஈ. பி. ஆர். எல். எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் யுத்தத்தின் பின்னரே போதைப்பொருள் பாவனை அறிமுகமானது. அந்த நிலையில் தான் தற்போது இராணுவத்தினர் புதிதாக சோதனை சாவடிகளை அமைத்து போதைப் பொருளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மீண்டும் வீதி சோதனை சாவடிகளை அமைத்து மீண்டும் அவர்களை வீதிகளில் இறக்கி சோதனைகளுக்கு உட்படுத்துவது என்பது அவர்களை மீண்டுமொரு முறை யுத்த கால நெருக்கடிக்குள் தள்ளுவதாகும்.

கொழும்பில் பெருமளவான போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. ஆனால் அங்கு வீதிச் சோதனை சாவடிகளை அமைத்து, வீதியில் செல்வோரை வழிமறித்து, சோதனை செய்ய முடியுமா? அவ்வாறு இல்லாதபோது ஏன் யாழ்ப்பாணத்தில் மட்டும் இந்த நிலமை?

போதைப்பொருள் கடல் வழியாகவே கடத்தப்படுகின்றது. அவற்றை தடுக்க முழு முயற்சிகளையும் எடுக்கலாம். பெருமளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்படும் போது, எவரும் கைது செய்யப்படவில்லை இது எமக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. - என்றார்.(ஐ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார். ”

*- லியூசி ரார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)*

## நீர் குழிக்குள் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 10

உஹன, மககண்டிய பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகிலிருந்த நீர் நிரம்பியிருந்த குழியொன்றுக்குள் வீழ்ந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

ஒரு வயதும் 02 மாதங்களுமான ஆண் குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோரால் மீட்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Eelanadu
10.11.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 26
**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நினைவுகூர்தல் தொடர்பில்?

யுத்தத்தில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் உரிமையை அரசாங்கம் எந்தவகையிலும் தடுக்கக்கூடாது. இறுதி யுத்தத்தில் உயிர்நீத்தவர்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் அடங்குவர். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கும் குடும்பமுண்டு - உறவினர்கள் உண்டு. அவர்களைப் பொறுத்தவரையில் தங்களின் பிள்ளைகளை - உறவினர்களை நினைவுகூரும் உரிமையை கோருவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், நினைவுகூர்வதற்கான உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. துயிலும் இல்லங்களில் நினைவுகூர்வதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டிருந்தன. கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்ததைத் தொடர்ந்து மீளவும் சில கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோ அவையே மீளவும் அமுல்படுத்தப்பட்டன. தற்போது குறித்த கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே பொலிஸார் விடயங்களை நோக்குவதாகத் தெரிகின்றது. எவ்வாறெனினும், நினைவுகூரும் உரிமையை எந்த வகையிலும் மறுதலிக்க முடியாது.

நினைவு கூர்வது தொடர்பான அரச கட்டுப்பாடுகள்மீது கேள்வியெழுப்புவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதேவேளை, நினைவுகூரும் விடயத்தை போட்டி அரசியலாக்கி அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கிவிடும் வேலையை தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் செய்யக்கூடாது. திலீபனை நினைவுகூரும் விடயத்தில் ஏற்பட்ட அனுபவங்களை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். நினைவுகூரும் உரிமைக்காக குரல் கொடுக்கும் நாம் மறுபுறமாக, அதனை பரிகசிக்கும் நோக்கில் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நினைவுகூர்தலை கட்சி அரசியலுக்கு அப்பால்பட்ட ஒரு கடப்பாடாகவே அனைத்து கட்சிகளும் கைக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தாம் மட்டுமே என்னும் போலியான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து பிளவுகளை ஏற்படுத்தக்கூடாது. நினைவு கூர்தலை முறையாக மேற்கொள்வதற்கு பொது அமைப்புக்கள் இருப்பின் அவர்களுடன் இணைந்தே கட்சிகள் செயல்பட வேண்டும். அவர்களைப் புறம்தள்ளி தாங்கள் மட்டுமே உரிமையாளர்கள் என்பது போல் செயல்பட எத்தனிப்பதால்தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. திலீபனை நினைவுகூரும் விடயத்திலும் இதுதான் நடந்தது.

இதற்கப்பால், நினைவு கூர்தலை போட்டி அரசியலாக்குவது அரசியல் நோக்கிலும் தவறானதாகும். ஏனெனில், நினைவு கூர்தலையே முறையாக நேர்மையாக முன்னெடுக்க முடியாதவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் நலன்களுக்கான அரசியலை முன்னெடுக்கப் போகின்றனர் - என்னும் கேள்வியே இறுதியில் துருத்திக்கொண்டு தெரியும்.

கடந்த பதின்மூன்று வருடங்களில், நினைவுகூர்தலைக்கூட, தமிழ் தலைமைகள் என்போரால் ஓரணியாக - கருத்தொருமித்து முன்னெடுக்க முடியவில்லை. களத்தில் மட்டுமல்ல புலத்திலும் இதுதான் நிலைமை. ஒவ்வொரு கார்த்திகை மாதத்திலும் நினைவுகூர்தலுக்கான சண்டைகளையும் மாறுபட்ட அபிப்பிராயங்களையும் ஒருவரை ஒருவர் வசைபாடும் நிலைமைகளையுமே நாம் கண்டிருக்கின்றோம். இனியாவது, கடந்த கால தவறுகளைப் புறம்தள்ளி ஒற்றுமையுடன் விடயங்களை கையாள்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் எவருமே இன்றைய கட்சி அரசியலுக்காக இறந்தவர்கள் அல்லர். அவ்வாறானவர்களை கட்சி அரசியலால் பிரிக்க முற்படுவது அடிப்படையிலேயே அவர்களை கொச்சைப்படுத்தும் செயலாகும். எனவே, இதனை முன்னெடுப்பவர்கள் எவருமே தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியுடையவர்கள் அல்லர்.

# இணைந்த வடக்கு - கிழக்கில் மீளப்பெற முடியாத சமஷ்டி!

**இராஜதந்திரி**

*இலங்கைத் தமிழர்களின் பூர்வீக தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்ற பிரகடனம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*வடக்கு - கிழக்கு மாகாணங்களை சேர்ந்த தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் வேண்டுமென கோரி நூறு நாள் நிகழ்வொன்றின் இறுதி நாளான நேற்று முன்தினம் இப்பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நூறு நாட்கள் வரை வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் இடம்பெற்றுள்ளது.*

*சமஷ்டி கோரிக்கை என்பது இலங்கையில் கற்றறிந்த அரசியல் சிந்தனை கொண்டோர் என்று கருதப்பட்டோர் இருந்த காலத்தில் 1926 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டிருந்தது.*

*இதனை முன்வைத்தவர் முன்னாள் பிரதமரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க. சிங்களவர்களுக்கு ஒரு பகுதியாகவும் பின்னர் வடக்கு - கிழக்கு இணைந்த வகையில் தமிழர்களுக்கு ஒரு பகுதியாகவும் சமஷ்டி முறையை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க உட்பட சிங்களத் தலைவர்கள் அன்று முன்வைத்தனர். ஆனால், அதனை தமிழ் தலைவர்களே நிராகரித்திருந்தனர்.*

*இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் வரலாறு வேடிக்கையானதாகவும் வேதனைகள் நிறைந்ததாகவும் இருந்ததையே அறிய முடியும். மிதவாத அரசியலில் மட்டுமல்ல. தீவிரவாத அரசியலிலும் ஒற்றுமையாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.*

*இனக்கலகங்கள் மூலம் சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களால் தமிழர்கள் பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால், தனிநாட்டுக்கான யுத்தத்தால் மூன்று தசாப்த காலம் எமது மக்கள் எம்மவர்களாலும் வஞ்சிக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தனர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.*

*வடக்கு - கிழக்கு தமிழர்களின் மிதவாத மற்றும் தீவிரவாத அரசியல் நடவடிக்கைகள் யாவும் தடம் புரண்டதே வரலாறாகிப்போயுள்ள நிலையிலேயே தற்போது வடக்கு - கிழக்கு மக்களுக்கான சமஷ்டி பற்றிய கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.*

*சமஷ்டி கோரிக்கை மட்டும் அன்று நிராகரிக்கப்பட்டிருக்கவில்லை. பல தசாப்தங்களுக்குப் பின்னர் 1987ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் நிராகரிக்கப்பட்டிருந்தது.*

*இந்திய அனுசரணையோடு கொண்டுவரப்பட்டிருந்த 13ஆவது திருத்தச்சட்டம் ஏறத்தாழ ஒரு சமஷ்டி ஏற்பாட்டுக்கு ஏற்ற வகையில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையையும் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது.*

*ஆனால், வடக்கு - கிழக்கின் அன்றைய ஆயுதப் போராளிகளையும் கௌரவமாக அரசியல் நீரோட்டத்தில இணைய வைத்து அவர்கள் எதிர்காலத்தில் எவ்வித பாதிப்புகளையும் எதிர்கொள்ளாத ஏற்பாட்டையும் 13ஆவது திருத்தச் சட்டம் வழங்கியிருந்தது.*

*இருந்தபோதிலும் அதனை உள்வாங்குவதை நிராகரித்ததோடு வடக்கு - கிழக்கு தமிழர்களின் நலன் கருதி அதனை அமுலாக்க வந்த இந்திய அமைதிப் படையையும் எதிர்கொண்டதே மிகப் பெரும் வரலாற்று தவறாக விளங்கியிருந்தது.*

*எனவே, 1926ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு வழங்கத் தயாராக இருந்த சமஷ்டி அமைப்பு முறையை நிராகரித்த அதேசமயம் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தூக்கி எறிந்த பின்னர் தற்போது மீளவும் ஒருபுறம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தையும் சமஷ்டி அமைப்பு முறையையும் வடக்கு - கிழக்குக்கு வேண்டி நிற்பது கவலைக்குரியதாகவே இருக்கின்றது.*

*தற்போதைய அரசியல் சூழ்நிலையில் 13ஆவது திருத்தச்சட்டம் இந்திய மற்றும் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களோடு அமுல்படுத்தப்படும் சாத்தியங்கள் ஏற்பட்டாலும் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதே கேள்விக்குறியாகவுள்ளது.*

*இதுதவிர, காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்பவை முழுமையான முறையில் கிடைக்குமா என்பது கூட சந்தேகமே.*

*காணி விவகாரத்தைப் பொறுத்தவரை முல்லைத்தீவு குருந்தூர் மலைப்பகுதியில் அத்துமீறல் மற்றும் வவுனியாவில் புராதன வெடுக்குநாறி சிவன் ஆலய சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள வெளியாரின் அச்சுறுத்தல். இதுதுவிர, முல்லைத்தீவு பகுதியில் இராணுவ தேவைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீள வழங்கப்படாமை என்பவை கூட வடக்கு - கிழக்கு மக்களின் தனித்துவங்களை கொச்சைப்படுத்தும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.*

*இத்தகைய பின்னணியில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை அங்கீகரிக்கும் விதத்தில் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட மற்றும் கொண்டுவரப்பட்ட தீர்வுத் திட்டங்களை எல்லாம் நிராகரித்த பின்னர் தற்போது மீளவும் இணைந்த வடக்கு - கிழக்குடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறையை வேண்டி நிற்பதை நோக்கும் போது அழுவதா அல்லது சிரிப்பதா என்று புரியாதிருக்கின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | | |
|---|---|---|
| நவம்பர் - 09 | | புதன்கிழமை |
| சுபகிருது வருடம் - | | ஐப்பசி 23 |
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 12.00 - 01.30 |
| திதி | : | பிரதமை |




**மேடம்**

குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நேற்றைய பிரச்னை ஒன்று சரியாகும்.

**இடபம்**

உங்கள் மனதிற்குப் பிடித்தவற்றில் ஈடுபாடு கொள்வீர்கள். நன்மையான நாள். உடலும் மனமும் மகிழ்ச்சியில் திளைக்கும். நினைத்தது பலிக்கும் நாள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**

திடீர் செலவுகளை சந்திப்பீர்கள். எச்சரிக்கை அவசியம். விழிப்புணர்வு தேவை. புதிய சிந்தனை மேலோங்கும். உங்கள் முயற்சி ஒன்றில் எதிர்மறையான பலன் உண்டாகும்.

**கடகம்**

முயற்சியில் வேகம் உண்டாகும். எதிர்பார்த்த பண வரவு வந்து சேரும். தொழிலில் புதிய யுக்தியைக் கையாள்வீர்கள். எதிர்பார்த்த ஒன்று வெற்றியாகும். விஜபிகள் சந்திப்பால் நன்மை உண்டாக்கும்.

**சிம்மம்**

உங்களுடைய விருப்பங்கள் இன்று எளிதாக நிறைவேறும். அரசு வழியில் நன்மை கிடைக்கும். இன்று நேற்றைய விருப்பத்தில் ஒன்று நிறைவேறும். செயல்களில் நன்மை காண்பீர்கள்.

**கன்னி**

நேற்று வரை இருந்து வந்த சங்கடம் விலகும். தடைபட்டிருந்த பணம் வந்து சேரும். நண்பர்களால் ஆதாயம் பெரியவர்களின் ஆதரவுடன் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளும் நாள்.

**துலாம்**

உங்கள் செயல்களில் நெருக்கடியை சந்திப்பீர்கள். எதிரிகளால் சில பிரச்னை உருவாகும். எதிர்பாராத சங்கடங்களை இன்று சந்திப்பீர்கள். அந்நியரால் உங்கள் மனம் அவதிப்படும்.

**விருட்சிகம்**

வழக்கத்தை விட கணவன் மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தினர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர். கூட்டுத் தொழிலில் இருந்த சிரமம் விலகும். நேற்று நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**

மறைமுகத் தொல்லைகள் விலகும். நினைத்ததை அடைவீர்கள். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு முடிவு கட்டுவீர்கள். நிம்மதியான நாள். உங்கள் திறமை இன்று வெளிப்படும்.

**மகரம்**

உங்கள் மனம் ஓய்வை விரும்பினாலும் அவசர வேலைகளால் சிரமத்திற்கு ஆளாவீர்கள். தாய் வழி உறவுகளால் உண்டான சங்கடங்கள் விலகும். நன்மை அதிகரிக்கும். உடலும் மனமும் சந்தோஷமடையும்.

**கும்பம்**

உங்கள் செயல்களில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப நீண்டநாள் எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**

குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். சகோதரரால் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வீட்டிற்குள் செல்வாக்கு உயரும். தைரியமுடன் செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

# தமிழக ஆளுநரை மீளப்பெற ஜனாதிபதியிடம் மனு அளிப்பு

சென்னை, நவ. 10

தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை மீளப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி ஆளும் தி. மு. க. கூட்டணியின் எம். பிக்கள் ஜனாதிபதியிடம் மனு அளித்துள்ளனர்.

தமிழக அரசாங்கம் நிறைவேற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தும் ஆளுநர் ஆர். என். ரவி, தொடர்ந்து தமிழக அரசை விமர்சனம் செய்து வருகிறார்.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வலியுறுத்தி குடியரசுத் தலைவரிடம் மனு அளிக்கவுள்ளதாக அறிவித்த தி. மு. க. பிற கட்சிகளும் மனுவில் கையெழுத்திட அழைப்பு விடுத்திருந்தது.

இதன்படி, தி. மு. க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனு குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அந்த மனுவில், ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ந்து சர்ச்சைக்குறிய வகையில் பேசி வருகிறார் என்றும் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நீண்ட காலமாக நிலுவையில் வைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

# பன்னீர்செல்வத்தை கட்சியில் சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை!

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, நவ. 10

'ஓ. பன்னீர்செல்வத்தை அ. தி. மு. க. வில் இணைக்க வாய்ப்பே இல்லை' என்று கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

பொதுக்குழுவில் 2 ஆயிரத்து 500 பேர் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி ஓ. பன்னீர்செல்வத்தை நீக்கினோம். உயர்நீதிமன்றம் நீதிபதி, பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளில் தலையிட முடியாது என்று கூறியுள்ளார். வாய்ப்பில்லை சட்ட விதிகளின்படி 2 ஆயிரத்து 500 உறுப்பினர்கள் சேர்ந்து முடிவு எடுத்தது. இதனால் அவர் இணைவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் கிடையாது. எம்.ஜி.ஆரால் ஏற்படுத்தப்பட்ட சட்ட விதிகளுக்கு உட்பட்டு பொதுக் குழு நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் செல்லும். அ. தி. மு. க. குறித்து பேசினால் தான் மக்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

தி. மு. க. பற்றி பேசினால் யாரும் கண்டு கொள்வதில்லை என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. தி. மு. க. ஆட்சி எப்போது போகும் என்ற மனநிலையில் மக்கள் உள்ளனர். அரசாங்கம் ஊழியர்கள் எப்போதும் தி. மு. கவுக்கு சாதகமாக இருப்பார்கள். ஆனால், அவர்களே இப்போது தி.மு.க. அரசை விமர்சனம் செய்து வருகிறார்கள் - என்றார். (ஐ)

# பொங்கல் பொதிக்கு பதில் பணமாக வழங்க தீர்மானம்?

சென்னை, நவ. 09

வரும் ஆண்டு பொங்கல் தொகுப்பிற்கு பதிலாக பணம் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் திருநாளான தைப் பொங்கல் வரும் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. ஒவ்வேர் ஆண்டும் பொங்கல் பண்டிகையையொட்டி அதற்கு முன்னதாக நியாய விலைக் கடைகள் மூலமாக மக்களுக்கு பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு, நெய் போன்ற பொருள்கள் தமிழக அரசு சார்பாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு திமுக அரசு 23 பொருள்கள் அடங்கிய பொருள்களை மக்களுக்கு வழங்கியது. ஆனால், தரமற்ற பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் முறைகேடு நடந்ததாகவும் பல்வேறு புகார்கள் வந்தன.

இந்நிலையில், 2023 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்பு வழங்குவது குறித்து தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, பொங்கல் தொகுப்புக்கு பதிலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ. 1,000 வழங்க முடிவு செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக அரசு இதுகுறித்து விரைவில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# "அ. தி. மு. கவில் பிரச்னை என்பது மாயத் தோற்றமே"

திருச்சி, நவ. 09

அ. தி. மு. கவில் பிரச்னை என மாயத்தோற்றம் உருவாகியுள்ளது. இது போகப்போக சரியாகிவிடும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

தொண்டர்களின் நலனுக்காக அ.தி.மு.க. உருவாக்கப்பட்டது. தொண்டர்களை என்றும் பிளவுபடுத்தி பார்க்க முடியாத இயக்கமாக அ. தி.மு.க. உள்ளது. சிறுசிறு பிரச்னைகள் இடையில் வரும். அது சரியாக போய் விடும். அனைத்து தொண்டர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அ.தி.மு.க. தலைமையில் தான் பிரச்னை என்கிற மாயத்தோற்றம் உருவாகி உள்ளது. அது போக போக சரியாகி விடும். தமிழகம் வருகை தரும் பிரதமர் மோடியை வாய்ப்பு கிடைத்தால் சந்திப்போம். அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க தயார் என்கிற டி.டி.வி.தினகரனின் கருத்து நல்ல கருத்து, இதை வரவேற்கிறோம். வாய்ப்பு ஏற்பட்டால் அவரை சந்திப்பேன் - என்றார். (ஐ)

# 7 மில்லியன் இலங்கையருக்கு பொருளாதார உதவி தேவை!

## ஐ.நா. அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 10

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சுமார் 7 மில்லியன் இலங்கையர்களுக்கு உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பின்மை, அச்சுறுத்தப்பட்ட வாழ்வாதாரங்கள், முக்கிய மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் பாதுகாப்புக் கவலைகள் ஆகியவற்றால் இணைந்த பல பரிமாண நெருக்கடியை இலங்கை தொடர்ந்து எதிர்கொள்கிறது என அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு இயக்கத்தின்படி, இறக்குமதி பற்றாக்குறை, உயர்ந்து வரும் விலைகள், வாழ்வாதார இடையூறுகள் மற்றும் வீட்டு அளவிலான வாங்கும் திறன் குறைதல் ஆகியவற்றின் விளைவாக கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை வியத்தகு அளவில் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

6.3 மில்லியன் மக்கள், அல்லது மக்கள்தொகையில் 28 சதவீதம் பேர் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முறைசாரா வேலைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வங்கிக்குள் பெண் ஊழியர் கழுத்தறுத்து படுகொலை!

## கணவன் வெறிச்செயல்

கொழும்பு, நவ. 10

ஹக்மன, கெபெலியபொலவில் உள்ள சனச வங்கிக்குள் நுழைந்த நபர் ஒருவர் வங்கியின் பெண் முகாமையாளரை கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார்.

முகாமையாளரின் கணவரே அவரைக் கொன்றதாகத் தெரிகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்குமிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே அவரது கணவர் இந்தக் குற்றத்தைச் செய்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வங்கி மேலாளர் நிஷாதி கல்பானி (வயது-22), வங்கியில் தனியாக வேலை செய்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் நடந்தபோது வங்கியில் வாடிக்கையாளர்கள் யாரும் இருக்கவில்லை. படுகாயமடைந்த முகாமையாளர் ஹக்மன கங்கோடாகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன.

தலைமறைவாகியுள்ள கணவரை கைது செய்ய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிரபல உணவகத்திலிருந்து 3 இலட்சம் ரூபா கொள்ளை!

கொழும்பு, நவ. 10

பாணந்துறை நகரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றின் பெட்டகத்திலிருந்து சுமார் மூன்று இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பிரதேசத்தில் உள்ள பிரபல உணவகம் ஒன்றின் பெட்டகத்திலிருந்து பணம் திருடப்பட்டுள்ளதாக உணவகத்தின் முகாமைத்துவம் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை ஆரம்பித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உணவகத்தின் காசாளரால் பெட்டகம் சரியாகப் பூட்டப்படவில்லை என்பது இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பொலிஸாரின் விசாரணைகளின்போது, அங்கிருந்த பாதுகாப்பு கமராக்களை சோதனையிட்ட போது, நள்ளிரவு ஒருவர் வருவது பதிவாகியுள்ளதுடன், திருட்டுக்கு நிறுவனமே உதவியதா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கையில் அதிகரிக்கின்றது தொழுநோயாளர் எண்ணிக்கை!

கொழும்பு, நவ. 10

இலங்கையில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொழுநோய் எதிர்ப்பு பிரச்சாரத்தின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தோல் நிறமாற்றம் காணப்பட்டாலோ அல்லது விரல்கள் மற்றும் கால்களில் உணர்வின்மை, தசை பலவீனம் அல்லது பக்கவாதம் போன்றவற்றை உணர்ந்தாலோ உடனடியாக மருத்துவ நிபுணரைத் தொடர்பு கொள்ளவேண்டும்.

தொழுநோயாளியை கண்டறிந்து, உரிய சிகிச்சை அளித்தால், மற்றொருவருக்கு நோய் பரவாமல் தடுக்க முடியும்.

அடையாளம் காணப்பட்ட நோயாளியின் குடும்ப உறுப்பினர்களை பரிசோதித்து அவர்களுக்கு தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்துவது முக்கியம்.

பாடசாலை மாணவர்களிடையே இந்நோய் பரவுவது அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், குருநாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிகளவான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதை அவதானிக்கின்ற நிலையில், குறித்த பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பிரித்தானிய தூதுவருடன் சந்திப்பு



கொழும்பு, நவ. 10

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹல்டனுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு, நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட்மினிஸ்டர் ஹவுஸில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை குறித்தும், விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இக்கட்டான பொருளாதார நெருக்கடி காலங்களில் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கியமைக்காக உயர்ஸ்தானிகருக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார். (அ)

# வழமைக்கு திரும்பியது கடவுச்சீட்டு விநியோகம்

கொழும்பு, நவ. 10

கடவுச்சீட்டு விநியோகம் வழமை போன்று நேற்று புதன்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த திணைக்களத்தின் கணனி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று முன் தினம் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது.

கோளாறு நேற்று முன் தினம் இரவு சரி செய்யப்பட்ட நிலையில் கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சுகாதார அமைச்சு பதவி ராஜிதவுக்கு?

கொழும்பு, நவ. 10

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு சுகாதார அமைச்சர் பதவியை வழங்கவுள்ளதாக அரசின் தகவல் அறியும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி வரவு செலவுத் திட்ட காலத்துக்குள் அவர் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவியை பெற்றுக் கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சுகாதார அமைச்சராக பதவி வகிக்கும் கெஹலிய ரம்புக்வெலவுக்கு வேறு அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிய முடிகிறது. (அ)

# இராணுவ அம்புலன்ஸில் மான் இறைச்சி கடத்தல்!

## இரு சிப்பாய்கள் கைது

கொழும்பு, நவ. 10

மாவனாவெல இராணுவ முகாமுக்கு சொந்தமான அம்புலன்ஸ் மூலம் மூன்று கிலோ மான் இறைச்சியைக் கொண்டு சென்ற சாரதியான லான்ஸ் கோப்ரல் மற்றும் சிப்பாய் உள்ளிட்ட இருவரையும் போயா தினமான திங்கட்கிழமை மதியம் மாதுறுஓய பூங்காவில் கைது செய்துள்ளதாக மாதுறுஓய வனவிலங்கு அலுவலகம் தெரிவித்தது.

சந்தேக நபர்களான இருவரும் மாவனாவெல இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய்களாவர். இவர்களை தெஹியத்தகண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக மாதுறுஓய பூங்காவின் பொறுப்பாளர் டீ.எஸ்.ஜயசோம ரத்நாயக்க தெரிவித்தார்.

மாதுறுஓய ஹேனன்னேகலவில் இருந்து மாவனாவெல இராணுவ முகாமிற்கு இதற்கு முன்னரும் மான் இறைச்சி கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் ஜயசோம ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த 07 ஆம் திகதி இராணுவ அம்புலன்ஸ் மூலம் மான் இறைச்சி கொண்டு செல்வதாக ஹேனன்னேகல வனவிலங்கு அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய உடனடியாக சுற்றிவளைப்பை மேற்கொண்டபோது அம்புலன்ஸ் மற்றும் மான் இறைச்சியுடன் சந்தேக நபர்களான இராணுவ சிப்பாய்கள் இருவரையும் கைது செய்ய முடிந்துள்ளதாக ஜயசோம ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# சுயாதீன வரவு - செலவு அலுவலகம் அவசியம்!

## ஹர்ஷ டி சில்வா கோரிக்கை

கொழும்பு, நவ. 10

**பொது நிதி, செலவுகள் மற்றும் கடன்களை முறையாக நிர்வகிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் ஒரு சுயாதீன வரவு - செலவு அலுவலகம் அவசியமானது. எனவே தேவையான சட்ட அதிகாரத்துடன் ஒரு வருடத்தில் அதனை நிறுவப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையில் பாராளுமன்றத்தில் இடைக்கால அடிப்படையில் செயலகம் ஒன்று அமைக்கப்படும்.

தமது தலைமையிலான பொது நிதிக்குழு நடைமுறையில் இருக்கும்போது வேறு உப குழுக்கள் அவசியமில்லை.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே, நல்லாட்சி அரசாங்கத்தின்போது சுயாதீன வரவு - செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவ வேண்டும்.

இந்த நிலையில் அந்த அலுவலகத்தின் முக்கிய செயல்பாடு பொது நிதி, செலவுகள் மற்றும் கடன்கள் தொடர்பாக பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை வழங்குவதாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அமைப்பின் மூலம் பொது நிதி பற்றிய முழுமையான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு வழங்கப்படும்.

அத்துடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் சட்ட மூலங்கள், குறிப்பாக நிதிச் சட்டமூலம் பற்றி விவாதம் செய்து வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

2021ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டா பயவினால் சீனி இறக்குமதிக்கான பிரதான வரிச்சலுகை வழங்கப்பட்டு வரிக் குறைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, பாராளுமன்றம், மத்திய வங்கி அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அதனை அறிந்திருக்கவில்லை.

இது, இறுதியில் அரசுக்கு பாரிய வருவாய் இழப்புக்கு வழிவகுத்தது. வரவு செலவுத் திட்ட அலுவலகம் இருந்திருந்தால் இது நடந்திருக்காது - என்றார். (அ)

# யாழ்ப்பாணத்தில் வழிப்பறியில் ஈடுபட்ட குற்றத்தில் 2 பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணத்தில் வழிப்பறி கொள்ளைகள் அதிகரித்துள்ள நிலையில், இருவேறு வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர், வீதியில் சென்ற பெண்ணொருவரின் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறிக் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இளவாலை பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞனை கைது செய்துள்ளனர்.

அதேவேளை, கொடிகாமம் பொலிஸ் பிரிவிக்கு உட்பட்ட அல்லாரைப் பகுதியில் பெண்ணொருவரின் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலி வழிப்பறி கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர், பல கொள்ளை மற்றும் களவு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஸ்திரப்படுத்தியுள்ளார்!

## ராஜித சேனாரத்ன புகழாரம்

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கி நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சிகளை தாம் பாராட்டுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கூறினார்.



நாட்டில் ஓரளவு இயல்பு நிலை திரும்புவதற்கு ஜனாதிபதி விக்ரமசிங்க ஆற்றிய பங்களிப்பை பொது மக்களும் அங்கீகரித்துள்ளதாக ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள முயற்சிப்பதாக வெளியாகும் குற்றச்சாட்டு குறித்து உறுதியான பதிலை ராஜித சேனாரத்ன வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 1 லீற்றர் டீசலில் 12 ரூபா நட்டம்!

கொழும்பு, நவ. 10

தற்போது அமுலில் உள்ள எரிபொருள் விலைக்கு அமைவாக ஒரு லீற்றர் டீசலுக்காக அரசுக்கு 12 ரூபா நட்டம் ஏற்படுவதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சர் டீ.வீ.சானக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலையை மாற்றுவதாக உறுதியளித்ததாகவும், ஆனால் இம்முறை விலைச்சூத்திரத்தின்படி எவ்வித மாற்றமும் ஏற்படாது என அறிவித்ததன் மூலம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் ஹேஷா விதானகே சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கார்த்திகை மரநடுகை மாதம்

# வடக்கு தமிழ் அதிகாரிகள் மறந்ததை நினைவூட்டினார் பிரதம செயலாளர்!

யாழ்ப்பாணம், நவ. 10

மர நடுகை மாதத்தை முன்னிட்டு வடமாகாண அமைச்சுக்கள், திணைக்களங்களில் மரநடுகையை மேற்கொள்ளுமாறு வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன அறிவித்துள்ளார்.

இதற்கான சுற்றறிக்கையை வடமாகாணசபைக்குட்பட்ட அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரிவு அலுவலகங்களில் தலா 50 மரங்களை நடுமாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலுப்பை, மருதம், புங்கை, பலா போன்ற மரங்களுக்கு முன்னுரிமை ளிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வடமாகாணசபையின் விவசாய அமைச்சராக பொ.ஐங்கரநேசன் பதவி வகித்த காலப்பகுதியில், கார்த்திகை மர நடுகை மாத தீர்மானம் வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கான முழுமையான முயற்சியை பொ.ஐங்கரநேசன் மேற்கொண்டிருந்தார்.

கார்த்திகை மாத மரநடுகை திட்டம் பெருமெடுப்பில் நடைமுறைப்படுத் தப்பட்டிருந்தது.

எனினும், மாகாணசபை சர்ச்சையையடுத்து புதிதாக பதவியேற்ற விவசாய அமைச்சர் க.சிவநேசன் அதில் ஆர்வம் காட்டவில்லையென குறிப்பிடப்பட்டது. அதனால் அது படிப்படியாக செயலற்று சென்றது.

வடமாகாணசபை ஆட்சிக் காலம் முடிந்ததும், அதிகாரிகள் அதைப்பற்றி அக்கறை காண்பிக்கவில்லை. எனினும், பொ.ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கம் கார்த்திகை மரநடுகை மாத திட்டத்தை சமூக மட்டத்தில் செயற்படுத்தி வந்தது.

இந்த நிலையில், தற்போதைய வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண சபை தீர்மானமான மரநடுகை திட்டத்தைச் செயற்படுத்த பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# தென்மராட்சி வயலில் தேங்கும் வெள்ள நீர்!

## ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்புரை

யாழ்ப்பாணம், நவ. 10

தென்மராட்சி பகுதியில் உள்ள வயல் நிலங்களில் தேங்கும் வெள்ள நீர் தொடர்பில் ஒரு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் வாகீசன் பணிப்புரை விடுத்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பது தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை ஆளுநரின் செயலாளருக்கும் தென்மராட்சி விவசாயிகளுக்கும் இடையிலான சந்திப்பு வட மாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ள நீர் தேங்குவது இயற்கையான தரை தோற்றம் காரணமாகவா அல்லது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட தடைகள் காரணமாகவா என ஆளுநரின் செயலாளர் கேள்வி எழுப்பினார்.



இவ்வாறான நிலையில் குறித்த வெள்ள நீர் தொடர்பில் ஒரு வார காலத்துக்குள் ஆளுநர் செயலகத்திற்கு அனுப்புமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்தார். (அ)

# விமான நிலையத்திலும் நேற்று கணினி கோளாறு!

கொழும்பு, நவ. 10

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் வருகை மற்றும் புறப்படும் முனையங்களில் உள்ள கணினி அமைப்புகள் நேற்றுக் காலை திடீரென செயலிழந்தன.

இதேவேளை, விமான நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் திணைக்கள அதிகாரிகளால் தானியங்கி முறையை கைவிட்டு தமது பணிகளை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் கொழும்பில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திலும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்படும் முனையங்களிலும் பொருத்தப்பட்டிருந்த கணனி அமைப்பில் கோளாறு ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக பிரதான அலுவலகத்திற்கு தேவைகளை பூர்த்தி செய்ய வந்த மக்கள் வரிசைகளில் நீண்டநேரம் காத்திருந்ததோடு, அப்பகுதிகளில் ஏற்பட்டிருந்த அமைதியின்மையை கட்டுப்படுத்த பொலிஸாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கட்டு நாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் கணனி அமைப்பை விரைவாக மீளமைக்கும் பணியில் ஈடுபட்டனர். (அ)

# யாழ். - கொழும்பு பஸ்கள் முகமாலையில் சோதனை!

## நாளை வெள்ளி முதல் நடைமுறை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்துகளின் வழித்தட அனுமதி, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன நாளை வெள்ளிக் கிழமை முதல் முகமாலையில் பரிசோதிக்கப்பட உள்ளதாக வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினரும் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான சி,சிவபரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது நாளை வெள்ளிக் கிழமை முதல் கொழும்பு - யாழ்ப்பாண இரவு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தினதும் வழித்தட அனுமதிப் பத்திரங்கள்,சாரதி அனுமதிப்பத்திரம் முகமாலையில் பரிசோதிக்கப் படுவது எனவும் அதேபோல புளியங்குளப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் அனைத்து பேருந்துகளும் 20 நிமிடங்கள் நிறுத்தி மீண்டும் பயணிக்க அனுமதிக்கப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைதடியில் உள்ளூராட்சி அமைச்சில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், எனவே நாளை முதல் யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களும் தங்கள் வழித்தட அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை தங்களுடன் உடைமையில் வைத்திருப்பது மிகவும் அவசியமெனவும் அது தவறும் பட்சத்தில் பொலிஸார் மற்றும் வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பயணித்த பேருந்து வவுனியாவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசின் செயல்பாடுகளை கண்டிக்கிறார் கர்தினால்

கொழும்பு, நவ. 10

பயங்கரவாதத் தடைச் சட்ட நடைமுறை மற்றும் அதனை எதிர்த்து போராடுவோரை கைது செய்யும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கண்டித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் பரவி வரும் கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும், அமைதியான போராட்டங்களை நடத்தும் மனித உரிமைகளுக்கான போராட்டத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக, கொடூரமான மற்றும் சகிக்க முடியாத அடக்குமுறையை அரசாங்கம் பிரயோகித்து வருகின்றது.

அரசியலமைப்பின் மூலம் அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளித்துள்ள பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான போராட்டங்களை நடத்துதல் ஆகியவற்றை ஆணவத்துடன் அரசாங்கம் தொடர்ந்து நசுக்கி வருகிறது.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்கு சம்மேளன ஒருங்கிணைப்பாளர் சிறிதம்ம தேரர் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்கள் இருவரும் இப்போது 75 நாட்களுக்கும் மேலாக, தெளிவான குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவரினதும் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை எந்தவித தீவிர உணர்வும் இன்றி விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பரிந்துரை விடுக்கப்பட்டிருந்தது.

இது பொதுமக்களை தவறாக வழிநடத்தும் நாடகமாகத் தோன்றுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை வெளியிட அரசாங்கம் தொடர்ந்து மறுப்பதை வெட்கப்பட வேண்டிய, நேர்மையற்ற செயல்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் 272 அப்பாவி மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டதுடன் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர், சிலர் உயிருக்கு ஊனமுற் றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களின் இரத்தம் நீதிக்காக சுவர்க்கத்தை நோக்கி அழுகிறது - என்றார். (அ)

# இந்து கற்கை பீடாதிபதியாக பத்மநாதன் தெரிவாகினார்!



யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து கற்கைகள் புதிய பீடத்தின் பீடாதிபதியாக சமஸ்கிருதத் துறை தலைவர் பிரம்மஸ்ரீ ச.பத்ம நாதன் ஏகமனதாக தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

கடந்த 06 ஆம் திகதி முதல் மூன்று வருட காலத்துக்கு இவர் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் சிவசிதம்பரம் எம். பியின் 30ஆம் ஆண்டு நினைவு வவுனியாவில்

வவுனியா, நவ. 10

வன்னி தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் நேற்று புதன்கிழமை காலை வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் ந.கருணாநிதி , பிரதேச சபை உறுப்பினர் சந்திரசேகரம் , வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல் கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலையிட்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

வவுனியா தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.தாமோதரம் பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவான இச் சிலை நிறுவப் பெற்றுள்ளது. (அ)

## சிங்கப்பூருக்கு அருகே படகு விபத்து;

# மீட்கப்பட்ட 303 இலங்கையரில் 76 பேர் யாழ்ப்பாணத்தவர்கள்!

கொழும்பு, நவ. 10

சிங்கப்பூருக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் தத்தளித்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் 76 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மலேசிய விமானம் மூலம் வேறு நாட்டுக்குச் செல்வதற்காகவே இந்தக் கப்பலில் இந்தக் குழுவினர் ஏறியுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்தில் மீட்கப்பட்ட 303 இலங்கையர்களும் தற்போது வியட்நாம் தலைநகர் ஹனோயில் இருந்து 1800 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வுங்தாவோ துறைமுகத்துக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூருக்கு அருகிலுள்ள கடலில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2 தொன் போதைப்பொருள் 11 மாதங்களுள் கைப்பற்றல்!

கொழும்பு, நவ. 10

2022 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 7 ஆம் திகதி வரை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது சுமார் 2 தொன் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் ,39 ஆயிரத்து 671 சுற்றிவளைப்புகளின்போது 39 ஆயிரத்து 428 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் இலங்கை கடற்படையினர் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் பெருமளவு ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

இக்காலப்பகுதிக்குள் கொக்கெய்ன் 370 கிலோ 106 கிராமும் , ஐஸ் போதைப் பொருள் 103 கிலோ 555 கிராமும், ஹசீஸ் போதைப் பொருள் 38 கிலோ 194கிராமும் கைப்பற்றப்பட்டதாக போதை வஸ்து ஒழிப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். (அ)

# ரிஷி சுனக் வந்தேறியின் வெற்றியா? வரவிருக்கும் நெருக்கடியின் அடையாளமா?

**சு.விஜயபாஸ்கர்**



**பிரிட்டனில் பிறந்ததால் அவருக்கு பிரிட்டன் குடியுரிமை கிடைத்ததே அன்றி, அவர் இனத்தால் பிரித்தானியர் அல்ல. வழிவழியாக பிரிட்டனில் வசித்த குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல. பிறப்புவழி பிரிட்டன் குடியுரிமை கொண்டவராக ரிஷி சுனக் இருப்பினும், பிரிட்டனைப் பொறுத்தவரையில் அவரது முதன்மை அடையாளம் வந்தேறி.**

இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரிஷி சுனக் இந்தியரா, பாகிஸ்தானியரா, ஆபிரிக்கரா, பிரித்தானியரா, இந்துவா, கிறித்துவரா, பார்ப்பனரா, பார்ப்பனர் அல்லாதவரா, பார்ப்பன அடிமையா, மாட்டுக்கறி சாப்பிடுவாரா, இந்திய மருமகனா, இடதுசாரியா, வலதுசாரியா, பணக்காரரா என்ற கேள்விகளுக்கு அப்பாற்பட்ட உண்மை ஒன்று உண்டு.


அந்த உண்மை என்னவெனில், இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் அவர் ஒரு வந்தேறி. வந்தேறி என்ற சொல் பயன்படுத்துவதற்கு வக்கிரமாக அல்லது இழிவான பொருள் தருகிறது என்ற உணர்வு இருக்குமானால், குடியேறி (அல்லது புலம்பெயர்ந்தவர்) என்ற சொல்லை பயன்படுத்திக் கொள்ளலாம். Immigrant என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்ச் சொல்லே குடியேறி.

பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்ட காலத்தில் ரிஷி சுனக்கின் முன்னோர்கள் ஆப்ரிக்காவில் குடியேறி பின்னர் பிரிட்டனின் குடியேறியபோது அங்கு பிறந்தவர் தான் ரிஷி சுனக். பின்னர் இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தியின் மகளை திருமணம் செய்து கொண்டதின் மூலமும் தனது இந்திய அடையாளத்தை வலுப்படுத்திக் கொண்டார் ரிஷி சுனக். மற்றபடி அவருக்கும் இந்தியாவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. தற்போதைக்கு அவர் பிரிட்டனின் பிறந்து வளர்ந்த பிரிட்டன் குடிமகன். பிரிட்டனில் பிறந்ததால் அவருக்கு பிரிட்டன் குடியுரிமை கிடைத்ததே அன்றி, அவர் இனத்தால் பிரித்தானியர் அல்ல. வழிவழியாக பிரிட்டனில் வசித்த குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல. பிறப்புவழி பிரிட்டன் குடியுரிமை கொண்டவராக ரிஷி சுனக் இருப்பினும், பிரிட்டனைப் பொறுத்தவரையில் அவரது முதன்மை அடையாளம் வந்தேறி.

உலகின் பெரும்பகுதியை கிட்டத்தட்ட 200 ஆண்டு காலம் கட்டி ஆண்ட இங்கிலாந்து நாட்டின் பிரதமராக வெள்ளையர் அல்லாத ஆசிய வம்சாவளியைச் சார்ந்த குடியேறி ஒருவர் பிரதமராக பதவியேற்றதின் பிண்ணனியையும், அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் விவாதிப்பது மிக தேவையான ஒன்றாக மாறியிருக்கிறது.

**வந்தேறி சூழ் உலகு:**

நாகரிகமும் தொழில் நுட்பமும் வளராத காலம் தொட்டு இன்று வரை வெளிப் பிரதேச மக்களின் குடியேற்றத்தை (அதாவது வந்தேறிகளைச்) சந்திக்காத எந்த ஒரு நிலப்பரப்பும் இந்த பூமிப் பந்தில் இல்லை. ஏனெனில் மனிதர்கள் வளமான வாழ்க்கையை தேடி புலம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர் என்பதற்கு வரலாற்று சாட்சியங்கள் எண்ணற்றவை உண்டு. எவரும் எந்த ஒரு நாட்டின் நிரந்தர குடியாக இருந்ததே இல்லை. தேசியம் என்ற கருத்தாக்கம் வளருவதற்கு முந்தைய காலத்தில் இருந்தே குடியேற்றம் நடந்து வருகிறது.




தேசியமும் நாகரிகமும் தொழில் நுட்பமும் வளராத காலத்தில் நடந்த வெளி நாட்டவர் குடியேற்றததினால் உருவான பிரச்சினைகளும், தேசியமும் நாகரிகமும் தொழில் நுட்பமும் வளர்ந்த தற்காலத்தில் வெளிநாட்டவர் குடியேற்றத்தினால் உருவாகும் பிரச்சினைகளும் வெவ்வேறானவை.

தேசியமும் நாகரிகமும் தொழில் நுட்பமும் வளருவதற்கு முந்தைய காலத்தில், வெளிநாட்டவர் இன்னொரு நாட்டில் குடியேற அரசியல் தடைகள் பெருமளவு ஏதும் இல்லையெனினும், இன்றைய நவீன போக்குவரத்து வசதிகள் இல்லை என்பதால் குடியேறுவது மிகக் கடினமான ஒன்றாகவே நீண்ட காலம் இருந்தது.

போக்குவரத்து வசதிகள் வளர்ந்த பின்னர் தேசியம், தேசிய எல்லைகள் என திட்டவட்டமான தடைகள் வெளிநாட்டவர் குடியேற்றத்திற்கு எதிராக உருவாகியுள்ளன. ஆனால் வெளிநாட்டவர் குடியேற்றங்கள் குறைந்து விட்டனவா? இல்லை. மாறாக நவீன போக்குவரத்து வசதிகள் இல்லாத காலத்தில் நடைபெற்ற குடியேற்றத்தை காட்டிலும் தற்போது அதிகமான குடியேற்றம் சட்ட ரீதியாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் நடைபெறுகிறது.

பிரிட்டனின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 15 சதவீத மக்கள் குடியேறிகள் (வந்தேறிகள்). அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், வெளிநாட்டு குடி யேறிகள் மற்றும் அவர்களின் (அமெரிக்காவில் பிறந்த) குழந்தைகள் எண்ணிக்கை தோராயமாக 84.8 மில்லியன் மக்கள், அதாவது அமெரிக்க மக்கள் தொகையில் 26 சதவீதம் வந்தேறிகளே. கனடா, ஆஸ்த ிரேலியா, சௌதி அரேபியா, அமீரகம், ஜெர்மனி, சிங்கப்பூர் என எந்த பொருளாதார வலுவுள்ள நாட்டை எடுத்துக் கொண்டாலும், வந்தேறிகளின் எண்ணிக்கை கணிசமாக இருக்கிறது.

சமீபத்திய மதிப்பீடுகளின்படி, 2020 இல் உலகளாவிய அளவில் 280.6 மில்லியன் வந்தேறிகள் இருந்தனர் - இது உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகை யில் (7.8 பில்லியன் மக்களில் 4 சதவீதம். வந்தேறிகளை இணைத்து ஒரு நாட்டை உருவாக்கினால், சீனா, இந்தியா மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு (மற்றும் இந்தோனேசியாவை விட சற்று பெரிய), உலகின் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக அது இருக்கும்.

**வந்தேறிகளும் தேசியமும் முதலாளித்துவமும்:**

வந்தேறிகளை தேசியமும் தேசிய எல்லைகளும் தடுத்தாலும் வந்தேறிகளின் எண்ணிக்கை வளர்ந்த நாடுகளில் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஏனெனில் மூலதனச் சுரண்டல் காரணமாக வளர்ந்த நாடு களில் தான் அதிக வேலை வாய்ப்பும், நல்ல அடிப்படை வசதிகளுடன் கூடிய வாழ்க்கைச் சூழலும் உள்ளன. மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளை ஒப்பிடுகையில் ஆப்ரிக்க, ஆசிய நாடுகளின் வாழ்க்கைச் சூழல் மிக மோசம். எனவே வளராத அல்லது சுரண்டப்பட்ட நாடுகளில் இருந்து பொருளாதார வலுவான நாடுகளை நோக்கி மக்கள் நகர்ந்து கொண்டே இருக்கின்றனர். அவர்களை தேசியமும் தேசிய எல்லைகளும் தடுத்துக் கொண்டே இருக்கின்றன.

ஆனால் முதலாளித்துவம் தேசியம் என்ற தடைக்கு எதிராக வெளி நாட்டவர் குடியேற்றத்தை ஆதரிக்கிறது. ஏனெனில் வந்தேறிகளால் முதலாளித்துவம் லாபம் ஈட்டுகிறது. எனவே தேசியமும், தேசிய எல்லைகளும் சுவர் கட்டித் தடுத்தாலும், தாராளமயமாக்கம் மற்றும் உலகமயம் என்னும் முதலாளித்துவ கொள்கைகள் தீவிரமாக உலகெங்கும் செயல்படுத்தப்படுவதின் தவிர்க்க இயலாத விளைவாக வளரும் நாடுகளில் இருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு குடியேறும் வெளிநாட்டினர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. வேலைவாய்ப்பு, உயர்கல்வி, மேம்பட்ட வாழ்க்கைத் தரம் உள்ளிட்ட பல காரணங்களுக்காக வறிய நாடுகளில் இருந்து வளமான நாடுகளுக்கு எண்ணற்றோர் குடியேற விரும்புகின்றனர். அவர்களில் கணிசமானோரால் குடியேறவும் இயலுகிறது. ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் உள்ள பெரு நிறுவனங்கள் தங்களது லாபத்தை அதிகரிக்க வெளிநாட்டவர்களுக்கு வேலை தருகின்றன. ஏனெனில் அவர்கள் உள்நாட்டவர்களை விட குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய தர தயாராக உள்ளனர். அது மட்டுமின்றி, உலகமயமாக்க பிண்ணனியில், தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக பெரு நிறுவனங்கள் தங்களின் வேலைகளை இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு Outsourcing செய்கின்றன. ழுரவளழரசஉபைெ மூலம் பெருத்த லாபத்தை பெருநிறுவனங்கள் சம்பாதிக்கின்றன. ஏனெனின் இது குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய எண்ணற்றோர் இந்தியா போன்ற ஏழை நாடுகளில் கிடைக்கின்றனர்.

“மூலதனம் (முதலாளித்துவம்) 10 வீத லாபம் வரும் என்றால் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யும். 20 வீத லாபம் வரும் என்றால் ரொம்பவும் சுறுசுறுப்பாக முதலீடு செய்ய ஓடுகிறது. 50 சதவீதம் லாபம் வரும் என்றால் எல்லாக் கெடுதலையும் செய்யத் துணிவு கொள்கிறது. 100 வீத லாபம் வரும் என்றால் அனைத்து சட்டங்களையும் காலில் போட்டு மிதிக்கத் தயார் ஆகிறது. 300 வீத லாபம் வரும் என்றால் இதற்காக எந்தக் குற்றத்தையும் செய்யத் துணியும். தூக்கிலிடப்படுவோம் என்றாலும் துணிந்து எதையும் செய்யும். சமூகக் கொந்தளிப்பும், மோதலும் லாபம் தருமென்றால் அதையும் மூலதனம் ஊக்குவிக்கும்” என்றார் கார்ல் மார்ஸ். வெளி நாட்டவருக்கு வேலைகளை தருவதின் மூலம் இலாபம் அதிகரிக்கும் என்றால் முதலாளித்துவ நிறுவனங்கள் சும்மா இருக்குமா?

முதலாளித்துவ பெரு நிறுவனங்களுக்கு லாபம். தொழிலாளர்களுக்கு ஒப்பிட்டளவில் வளமான எதிர்காலம். இரண்டும் இணையும் போது, வெளி நாட்டவர் குடியேற்றம் நிகழ்கிறது. இவ்வாறாக வேலை வாய்ப்பு, கல்வி, நல்ல வளமான வாழ்க்கைச் சூழல் காரணமாக வெளி நாட்டில் இருந்து வந்து பணக்கார நாட்டில் குடியேறும் மக்கள், அந்தந்த நாடுகளில் குடியுரிமை வாங்கவும் முயற்சிக்கின்றனர். அதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் கிடைக்கிறது. இதன் விளைவாக வெளி நாட்டவர் (குடியேறிகள்) மக்கள்தொகை அதிகரிக்கிறது. இது தவிர்த்து,

(09ஆம் பக்கம் பார்க்க)

# வந்தேறிகளால் ஏற்படும் பிரச்னைகள் தீவிர வலதுசாரிகளை வளர்க்கிறது!

> ஒருபுறம் முதலாளித்துவம் உருவாக்கிய வந்தேறிகள், மறுபுறம் முதலாளித்துவத்தால் உள் நாட்டில் ஏற்படுகின்ற வேலைவாய்ப்பின்மை, உழைப்புச் சுரண்டல், பொருளாதார ஏற்றத் தாழ்வு, விலைவாசி என இருபக்கமும் வளர்ந்த நாடுகளின் குடிமக்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இந்த வாழ்வாதார பிரச்சினைகளை பயன்படுத்திக் கொண்டு வலதுசாரிகள் "நாடு, நாட்டுப்பற்று" போன்ற வெற்றுக் கோஷங்களை முன்வைத்து தேர்தலைத் சந்தித்து வெற்றியும் பெறுகின்றனர்)

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள் நாட்டுப் போர் உள்ளிட்ட மற்ற காரணங்களுக்காக அகதிகளாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் ஏழை நாடுகளில் இருந்து பணக்கார நாடுகளுக்கு குடியேறுகின்றனர்.

வெளி நாட்டவருக்கு தரப்படும் வேலைகள், வெளி நாடுகளுக்கு மாற்றப்படும் வேலைகள், அதிகரிக்கும் குடியேறிகள் மக்கள் தொகை என வெளி நாட்டவரை முன்வைத்து நடக்கும் அரசியல், கடந்த பல பத்தாண்டுகளாக பொருளாதார வலு கொண்ட மேலை நாடுகளின் அரசியலில் பெரும் தாக்கத்தை செலுத்திவருகிறது. இதன் விளைவாக வெளிநாட்டவர் குடியேற்றத்தை எதிர்க்கும் கண்ணோட்டம் கொண்ட கட்சிகள் வளர்கின்றன. வெளி நாட்டவர் குடியேற்றத்தை எதிர்க்கும் கட்சிகள் குடியேறி மக்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்கின்றன. குடியேறி மக்கள் வேலை வாய்ப்புகளை பறித்து விடுவதால் அந்த நாட்டின் நீண்ட நாள் குடிமக்களின் வேலை வாய்ப்புகள் பறிபோகின்றன என்ற பிரச்சாரம் மேலை நாடுகளில் செல்வாக்கு பெறுகின்றன.

இதை வேறு வார்த்தைகளில் சரியாகச் சொல்வதானால், முதலாளித்துவம் தனது லாபத்திற்காக வந்தேறிகளை உருவாக்கியதால், வளர்ந்த நாடுகளில் "குடிமக்கள் நலன் என்ற பெயரில்" வலதுசாரித் தேசியவாதம் வளர்கிறது. முதலாளித்துவத்தின் இலாபவெறி வந்தேறிகளுக்கும் வளர்ந்த நாடுகளின் பாரம்பரிய குடிமக்களுக்கும் இடையே ஒரு முரண்பாட்டை உருவாக்கிவிட்டது.

### வலதுசாரித் தேசியவாதம்:

வலதுசாரித் தேசியவாதம் வந்தேறிகளை உருவாக்கிய முதலாளித்துவத்தோடு மோதாமல், பிழைப்புக்காக குடியேறும் மக்களோடு மோதுகிறது. ஐரோப்பிய யுனியனில் இருந்து உடனடியாக பிரிட்டனை பிரிப்பேன் என்ற முழக்கத்தை முதன்மையான தேர்தல் முழக்கமாக வைத்து 2019 தேர்தலில் வென்று பிரிட்டன் பிரதமரானார் போரிஸ் ஜான்சன். ஐரோப்ஷபாவின் ஏழை நாடுகளான உக்ரைன், போலந்து, ருமேனியா போன்ற நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் பிரிட்டனுக்கு வேலை நிமித்தமாக குடிபெயர்வதின் காரணமாக பிரிட்டனில் வேலையின்மை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகள் உருவாகின்றன என்ற கோஷத்தை முன்வைத்து ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டனை வெளியேற்றத்தை விரைவு படுத்தியதின் மூலம் தனது தேர்தல் வாக்குறுதியையும் நிறைவேற்றினார் போரிஸ் ஜான்சன்.

இந்தியர் உள்ளிட்ட வெளிநாட்டவர்களின் அமெரிக்க குடியேற்றத்தை குறைக்கவே H1B விசா விதிகளில் மாற்றத்தை கொண்டு வந்தார் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப். மெக்சிகோவை சேர்ந்த ஏராளமானவர்கள் எல்லை வழியாக ஆண்டு தோறும் சட்ட விரோதமாக ஊடுருவுவதை தடுக்க, அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என்பது அதிபர் டிரம்பின் கனவு திட்டம். மெக்சிக்க எல்லையில் சுவர் கட்டுவேன் என்ற கோஷம் 2016 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்பின் துருப்புச் சீட்டுகளில் ஒன்று. வெற்றி பெற்ற பின்னர் சுவர் எழுப்பவும் முயன்றார். தடுப்புச் சுவர் கட்டும் பணி முழுமையடவில்லையெனிமும், சுவர் பிரச்சினை அமெரிக்கத் தேர்தலில் முக்கிய பிரச்சினையாக இருந்தது.

உள்நாட்டவர் (குடிமக்கள்) வேலைகளை வெளி நாட்டினர் (வந்தேறிகள்) பறிக்கின்றனர் என்ற வாதம் சிங்கப்பூர் எதிர்க்கட்சிகளின் மிக முக்கியமான தேர்தல் வாதங்களில் ஒன்று. வெளி நாட்டவரை பணியமர்த்துவதை குறைத்து உள் நாட்டவரை கூடுதலாக பணியமர்த்துவதை சிங்கப்பூர் நிறுவனங்கள் அதிகப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் வெளிநாட்டு ஊழியர்களுக்கான வேலைவாய்ப்பு வீசா விதிமுறைகளை சிங்கப்பூர் அரசு பலமுறை திருத்தியுள்ளது. வந்தேறிகளுக்கு நிரந்தர குடியிருப்பு விசா வழங்குவதில் பல கட்டுப்பாட்டுகளை கொண்டு வந்தது சிங்கப்பூர்.

சுருக்கமாகச் சொன்னால், உலகின் பல வளர்ந்த நாடுகளில் உள்ள பொதுப் பிரச்சினையாக அதிகரித்து வரும் வெளி நாட்டவர் குடியேற்றம் இருந்து வருகிறது. குடியேற்றத்திற்கான காரணங்களாக எதைச் சொன்னாலும், குடியேற்றத்தை தவிர்க்க எவ்வித தடைகளை ஏற்படுத்தினாலும் வெளிநாட்டவர் குடியேற்றங்களை எவராலும் தடுக்க முடியவில்லை.

வெளிநாட்டு மக்களின் குடியேற்றம் தவிர்க்க முடியாதபடி ஆகிவிட்டதால், குடியேறிய நாடுகளில் அவர்களில் குறிப்பிடத்தகுந்த தொகையினர் குடிமக்களாக மாறுவதும் தவிர்க்க இயலாததாகி விட்டது. குடியேறிய நாட்டில் குடிமக்கள் ஆகும் வரை, கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் உள்ளிட்ட சில வாய்ப்புகளைத் தவிர்த்து, ஓட்டுரிமை உள்ளிட்ட பெரிய அரசியல் உரிமைகள் குடியேறிகளுக்கு கிடையாது. குடியுரிமை கிடைத்த பின்னர் ஓட்டுரிமை உள்ளிட்ட அனைத்து அரசியல் உரிமைகளும் கிடைக்கும் போது குடியேறிகள் தாங்கள் குடியேறிய நாட்டில் அரசியல் அதிகாரங்களை கேட்பதும் இயல்பே. இந்த வகையில் கனடா, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல வளர்ந்த நாடுகளில் இந்திய வம்சாவளியினர் உள்ளிட்ட பல குடியேறிகள் அரசியல் அதிகாரங்களை பெறுவதும் தவிர்க்க இயலாத மாற்றம். அதன் உதாரணமாக அமெரிக்க துணை அதிபராக கமலா ஹாரிஸ் என்ற இந்திய வம்சாவளிப் பெண்ணும், அவரைத் தொடர்ந்து பிரிட்டனின் பிரதமராக ரிஷி சுனக்கும் தற்போது பதவியேற்றுள்ளார். அந்த வகையில் இது ஒரு எதார்த்தம். ஆனால் வலதுசாரிகள் சும்மா இருப்பார்களா?

### வளர்ந்த நாடுகளில் வலது சாரிகளின் எழுச்சி:

ஒருபுறம் முதலாளித்துவம் உருவாக்கிய வந்தேறிகள், மறுபுறம் முதலாளித்துவத்தால் உள் நாட்டில் ஏற்படுகின்ற வேலைவாய்ப்பின்மை, உழைப்புச் சுரண்டல், பொருளாதார ஏற்றத் தாழ்வு, விலைவாசி என இருபக்கமும் வளர்ந்த நாடுகளின் குடிமக்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இந்த வாழ்வாதார பிரச்சினைகளை பயன்படுத்திக் கொண்டு வலதுசாரிகள் "நாடு, நாட்டுப்பற்று" போன்ற வெற்றுக் கோஷங்களை முன்வைத்து தேர்தலைத் சந்தித்து வெற்றியும் பெறுகின்றனர். அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக அமெரிக்காவின் டொனால்டு ட்ரம்ப், இங்கிலாந்தின் போரிஸ் ஜான்சன், இத்தாலியின் ஜியார்ஜியா மெலானி, இஸ்ரேலின் பெஞ்சமின் நேதன்யாகு, ஸ்விடனின் வலதுசாரி கூட்டணியின் தேர்தல் வெற்றிகளை எடுத்துக் கொள்ளலாம். சமீபத்தில் டென்மார்க்கில் நடந்த பொதுத் தேர்தலிலும், ஆட்சியை பிடிக்காவிடினும் வலதுசாரித் தேசியவாத கட்சிகள் குறிப்பிடத் தக்க வெற்றியை பெற்றுள்ளன. 2022 ஏப்ரல் மாதத்தில் நடந்த பிரான்ஸ் நாட்டின் அதிபர் தேர்தலில் தீவிர வலதுசாரித் தேசிய வாதம் பேசிய மரைன் லு பென் மிகக் குறைந்த வித்தியாசத் தில் தான் தோற்றார்.

| | Destination | |
|---|---|---|
| | Number | Share of International Migrant Population (%) |
| **Total International Migrant Population** | 280,598,105 | 100% |
| Europe and Northern America | 145,414,863 | 52% |
| Northern Africa and Western Asia | 49,767,746 | 18% |
| Sub-Saharan Africa | 22,221,538 | 8% |
| Eastern and Southeastern Asia | 19,591,106 | 7% |
| Central and Southern Asia | 19,427,576 | 7% |
| Latin America and the Caribbean | 14,794,623 | 5% |
| Australia and New Zealand | 9,067,584 | 3% |
| Oceania (excluding Australia and New Zealand) | 313,069 | 0% |

*Note:* Per UN definition, Northern America includes Bermuda, Canada, Greenland, Saint Pierre and Miquelon, and United States. To see which countries are part of each region listed in the above table, click here.
*Source:* MPI tabulation of data from UN DESA Population Division, *International Migrant Stock 2020:* Destination, Table 1: International Migrant Stock at Mid-Year by Sex and by Region, Country or Area of Destination, 1990-2020.

### தீர்வு உண்டா?

முதலாளித்துவம் ஏற்கனவே ஏற்படுத்தி வரும் நெருக்கடிகளுடன் இணைந்து, கொரோனா பெருந்தொற்று, ரஷ்யா - உக்ரைன் மோதல் போன்ற பிரச்சினைகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விலைவாசி உயர்வு, பணவீக்கம் அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் உருவாகியுள் ளன. மேலும் 2008-09 ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் போல் ஒரு பொருளாதாரப் பெரு மந்தம் ஏற்படுவது போன்ற நெருக்கடியான சூழலும் உருவாகியுள்ளது.

இந்த நெருக்கடிகளுக்கு மேற்கு ஐரோப்பிய - வட அமெரிக்க பணக்கார நாடுகளில் உடனடியாக கிடைக்கிற தீர்வு "தீவிர வலதுசாரித் தேசியவாதம்".

தீவிர வலதுசாரித் தேசியவாதம் முதலாளித்துவம் உருவாக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது. மாறாக பிரச்சினையின் தீவிரத்தை கூர்மைப் படுத்தும். அதற்கான சான்று பிரிட்டனின் சமீபத்திய தேர்தல் பிரச்சார விவாதங்களிலும், ரிஷி சுனக் அமைச்சரவையின் உள்துறை அமைச்சர் சுயெல்லா பிரேவர்மேனின் நடவடிக்கைகள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும்.

வேலையின்மை, பணவீக்க உயர்வு, விலைவாசி உயர்வு, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, தனியார்மயக் கொள்கைகள் ஏற்படுத்திய தீய விளைவுகள், உக்ரைன் - ரஷ்யா போரினால் ஏற்பட்ட நெருக்கடிகள், ஊழல் என பல பிரச்சினைகள் இருந்தாலும், பிரதமர் பதவிக்கான தேர்தல் பிரச்சாரங்களில் கன்சர்வேட்டிவ் கட்சியின் லிஸ் டிரஸ்ஸும் ரிஷி சுனக்கும் இங்கிலாந்தின் முதன்மை எதிரியாக சீனாவை பிரகடனம் செய்து தேர்தல் பிரச்சாரம் செய்தனர். ஐரோப்பிய யூனியனில் இருந்து விட்டதால், அதை முன்னிறுத்த வாய்ப்பில்லாமல் போனதால் சீனாவைத் தேர்ந்தெடுத்தார்கள் போலும். அதேபோல் ரிஷி சுனக் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக பதவியேற்ற சுயெல்லா பிரேவர்மேனின் முதல் அரச நடவடிக்கை "வந்தேறிகளுக்கு எதிராக" பேசியது தான். சுயெல்லா பிரேவர்மேனும் ஒரு வந்தேறி என்பது குறிப்பிடத்தக்கது. பிரதமர் ரிஷி சுனக் போலவே, சுயெல்லா பிரேவர்மேனக்கும் மொரிசியஸ், கென்யா, இந்து, தமிழ், கிறித்துவர், இந்தியா, கோவா என பல அடையாளங்கள் இருக்கின்றன. அவரே வந்தேறியாக இருப்பினும் அவர் தீவிர வந்தேறி எதிர்ப்பு கொள்கை கொண்டவராக இருக்கிறார். சொந்த நாட்டில் வாழ வக்கற்று, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக சிறிய படகுகளில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் அகதிகளின் வருகையை "பிரிட்டன் மீதான படையெடுப்பு" என்று வர்ணித்தார் சுயெல்லா பிரேவர்மேன்.

அகதிகள் உள்ளிட்ட வந்தேறிகள் விஷயத்தில் பிரதமர் ரிஷி சுனக் தனது உள்துறை அமைச்சர் சுயெல்லா பிரேவர்மேனை விட எவ்விதத்திலும் தாராளமயக் கொள்கை கொண்டவர் அல்ல. குறிப்பாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்கா உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு குடியேற விரும்பும் மக்களுக்கு எதிராக குரல் எழுப்பும் ரிஷி சுனக், "படகு மக்களை" பிரிட்டனுக்குள் அனுமதிக்க முடியாது என்றார். வந்தேறிகள் விஷயத்தில் போரிஸ் ஜான்சனும், ரிஷி சுனக்கும், டிரம்பும், ஜியார்ஜியா மெலானி, பெஞ்சமின் நேதன்யாகு வெவ்வேறானவர்கள் அல்ல. மேலும் வந்தேறிப் பிரச்சினை தனி நபர் பிரச்சினையும் அல்ல. முதலாளித்துவம் உருவாக்கும் தொடர் பிரச்சினை.

முதலாளித்துவம் உருவாக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு முதலாளித்துவ உலகில் இருந்து வராது. மாறாக பிரச்சினைகளை திசை திருப்பும் அல்லது "வலது சாரித் தீவிரவாதம்" போன்று வேறு பிரச்சினைகளை உருவாக்கும். எண்ணெய்ச் சட்டியில் இருந்து எரியும் அடுப்புக்குள் குதிப்பதற்கு ஒப்பானது அது.

சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வை உருவாக்கும் முதலாளித்துவ உலகை வீழ்த்தி, சமூகப் பொருளாதாரச் சமநிலையை உருவாக்கும் சோசலிச சமுகத்தை அமைக்கும் போது தான் வந்தேறிப் பிரச்சினை தீரும். அதுவரை போராடுவது நம் கடமை.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1) 
2) 
3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** பொருத்தமான வாக்கியங்கள்

### கல்வி tv CHANNEL-1

**10.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**10.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

### அகில இலங்கைத் தமிழ்மொழி தினப் போட்டியில்

# கிழக்கு மாகாணம் முதலிடம் பிடித்தது!

அம்பாறை, நவ. 10

கடந்த வாரம் இடம்பெற்று முடிந்த அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் கிழக்கு மாகாணம் 22 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

7 முதலிடங்களையும் ,6 இரண்டாம் இடங்களையும், ஒன்பது மூன்றாம் இடங்களையும் பெற்று 22 புள்ளிகளை பெற்றுள்ளது.

அதன்படி, இவ் ஆண்டுக்கான முதலாம் நிலை மாகாணமாக கிழக்கு மாகாணம் தெரிவாகி உள்ளது.

இம்முறை வடக்கு மாகாணம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

10 முதல் இடங்களையும், 5 இரண்டாம், இடங்களையும் ஐந்து மூன்றாம் இடங்களையும் பெற்று இருபது புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தில் இருக்கின்றது.

13 புள்ளிகளுடன் மேல் மாகாணம் மூன்றாம் இடத்தையும், 12 புள்ளிகளுடன் மத்திய மாகாணம் நான்காம் இடத்தையும், 10 புள்ளிகளுடன் ஊவா மாகாணம் ஐந்தாம் இடத்தையும், 5 புள்ளிகளுடன் சப்பிரகமுவ மாகாணம் ஆறாம் இடத்தையும், மூன்று புள்ளிகளுடன் வடமேல் மாகாணம் ஏழாம் இடத்தையும், இரண்டு புள்ளிகளுடன் தென் மாகாணம் எட்டாம் இடத்தையும் பிடித்துள்ளது.

வட மத்திய மாகாணத்தில் எந்த விதமான புள்ளிகளும் கிடைக்கவில்லை .

இந்த பெறுபேறுகளை இலங்கை கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சேதுரட்ணம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

இதன்படி ,கிழக்கு மாகாணம் அண்மைக்காலமாக சகல துறைகளிலும் முதலிடத்தை பிடித்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (அ)




## ஆசிரியர்களுக்கு நேற்று இலவச மருத்துவ முகாம்

அம்பாறை, நவ. 10

கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை பகுதியில் இருக்கின்ற டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையினர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ முகாமை நடத்தி வருகின்றனர்.

நேற்று புதன்கிழமை சம்மாந்துறை செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் இடம் பெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பொதுமக்களும் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பொது முகாமையாளர் எம். எஸ்.எம். நஜ்முடீன் தலைமையில் மருத்துவர் ஜமால்டீன், மருத்துவர் அசாப் ஆகியோரின் கண்காணிப்பில் இந்த முகாம் நடத்தப்பட்டது.

சம்மாந்துறைக் கிளை முகாமையாளர் ஹாபி பிஸ்ருல் மஜீத் நெறிப்படுத்தலில், சம்மாந்துறை பிரதேசத்தில் இது வரை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் ,செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்திலும் முகாம் நடைபெற்று இருக்கின்றது.

அதன் அடிப்படையில் கல்முனை வலயத்திலே இது வரை ஸாகிரா கல்லூரி, சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயம், அல் ஜலால் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளில் இடம் பெற்றன.

எதிர்வரும் வாரங்களில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இடம்பெற இருக்கின்றது என பொது முகாமையாளர் நஜ்முடீன் தெரிவித்தார். (அ)

## அதிபர், ஆசிரியரை இடமாற்றக் கோரி தம்பிலுவில் பாடசாலை முன் போராட்டம்

அம்பாறை, நவ. 10

அம்பாறை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் மாணவிகள் மீது பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியர் ஆகியோரை இட மாற்றக்கோரி பாடசாலைக்கு முன்னால் நேற்றுக் காலை பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




இந்த பாடசாலையில் இடம் பெற்று வரும் நிர்வாகச் சீர் கேட்டினால் நேற்று முன் தினம் இரு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவன் உயிரிழந்துள்ளான். இவ்வாறு தொடர்ந்து மாணவர்கள் பாதிக்கப்படு வதையிட்டு பெற்றோர்கள் பாடசாலைக்கு முன்னால் நேற்று காலை 8 மணிக்கு ஒன்றிணைந்தனர்.

இதன்போது பாடசாலை யின் நிர்வாகச் சீர்கேடே மாண வனின் உயிரை பறிக்கக் காரணம், கல்வி அமைச்சே பொருத்தமான அதிபரை நியமி, வெளியில் மதுபானம் விற்பவர் பாடசாலை சிற் றுண்டி விற்பதா?, தேசிய பாடசாலையை நாசம் செய்ய வந்த கூட்டமே வெளியேறு, அன்று ஏழைகளின் கஞ்சிப் பானையில் அடித்தவன் இன்று கல்வியை அழிக்க வந்ததா?. பாலியல் சீண்ட லால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்குமா?

பாடசாலைக்கு வந்து கல்வி புகட்டாத பாதகர்களே வெளியேறு போன்ற சுலோ கங்கள் ஏந்தி கோஷங்கள் எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட பின்னர் ஆர்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர். (அ)



## மூதூர் தள வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் கையளிப்பு

திருமலை, நவ. 10

மத்திய சுகாதார அமைச்சினால் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற நோயாளர் காவு வண்டி கையளிக்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் வி.பிரமானந் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டு நோயாளர் காவு வண்டியை மூதூர் தள வைத்தியசாலைக்கு வழங்கினார்.

குறித்த வண்டியை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வி.கயல்விழி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி. ஜீ.எம்.கொஸ்த்தா உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மூதூர் தள வைத்தியசாலைக்கு மிக அத்தியவசியத் தேவையாக இருந்துவந்த நோயாளர் காவு வண்டி தொடர்பில், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனை கடந்த மாதம் திருகோணமலை சுகாதார அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து, நேற்று நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பெரும் சர்ச்சைக்கு மத்தியில் வெட்டப்பட்டது முகத்துவாரம்!

அம்பாறை, நவ. 10



தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக காரைதீவு பிரதேசம் வெள்ளத்தில் அமிழ இருந்த சந்தர்ப்பத்தில் முகத்துவாரம் நேற்று புதன் கிழமை வெட்டப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் எடுத்த அதிரடி நடவடிக்கையால் தாழ இருந்த காரைதீவுப் பிரதேசம் காப்பாற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொது மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பிரதேச சபை ஊழியர்கள் முகத்துவாரம் வெட்டச் சென்றபோது சில மீனவர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து அந் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

எனினும் அன்று இரவு விடிய விடிய பெய்த அடைமழையால் பார்க்கும் இடமெல்லாம் வெள்ளநீர் நிரம்பியது. குடிமனைகள் பொது நிறுவனங்கள் ஆலயங்கள் அமிழும் நிலை தோன்றியது.

பொது மக்கள் சென்று பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலிடம் முறையிட்டனர்.

இச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம் பெற்றது.

தவிசாளர் நேற்று புதன் கிழமை காலை ஊழியர்களுடன் ஸ்தலத்திற்கு விரைந்து வெட்டுவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டார்.

கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் ஆலோசனையின் படி தவிசாளர் ஜெயசிறில் முன்னிலையில் முகத்துவாரம் வெட்டப்பட்டது.

அங்கு ஜேசிபி கனரக இயந்திரம் பழுதடைந்த காரணத்தினால் பொதுமக்களும் சபை ஊழியர்களும் இணைந்து இந்த முகத்துவாரத்தை வெட்டி அமிழ இருந்த காரைதீவுப் பிரதேசத்தை காப்பாற்றினார்கள். (அ)



# நேபாளத்தில் நிலநடுக்கம்!

## வீடுகள் இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழப்பு

காத்மண்டு, நவ. 10

**நேபாளத்தில் ஏற்பட்டுள்ள தொடர் நிலநடுக்கத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர்.**

நேற்று முன் தினம் காலை நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் 4.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்ட நிலையில், நேற்று (புதன்கிழமை) அதிகாலை 1.57 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியுள்ளதோடு, 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

டோட்டி மாவட்டத்தில் நிலநடுக்கத்தால் வீடு இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்துள்ளதாக முதல்கட்ட தகவல் வெளியாகியிருந்தது.

இந்தநிலையில், நிலநடுக்கத்தால் வீடுகள் இடிந்து விழுந்ததில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் இந்தியாவின் புதுடில்லி நகரிலும் உணரப்பட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# அமெரிக்கா - ரஷ்யா மீண்டும் அணு ஆயுத குறைப்பு பேச்சு!

நியூயோர்க், நவ. 10

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க அமெரிக்காவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளன.

உலகின் இரண்டு பெரிய அணுசக்தி நாடுகளுக்கு இடையே எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம், இருதரப்பு ஆலோசனைக் குழு (பிசிசி), அதைச் செயல்படுத்துவதற்கான வழிமுறை, “எதிர்காலத்தில்” சந்திக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் செவ்வாய் அன்று கூறினார்.

இருதரப்பு ஆலோசனைக் குழு கடைசியாக ஒக்டோபர் 2021 இல் சந்தித்தது. குழு ஆண்டுக்கு இரண்டு முறை சந்திக்க வேண்டும்.

வோஷிங்டன் ஒரு “ஆக்கபூர்வமான அமர்வை” எதிர்பார்க்கிறது என்று பிரைஸ் கூறினார், இருப்பினும் அவர் சந்திப்புக்கான திகதி அல்லது இடத்தை வெளியிடவில்லை.

மீண்டும் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் மத்திய கிழக்கில் நடைபெறலாம் என்று ரஷ்ய செய்தித்தாள் கொமர்சன்ட் தெரிவித்துள்ளது. செய்தித்தாள் படி, உக்ரைன் மீது படையெடுத்ததை தொடர்ந்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்ததன் காரணமாக, வழக்கமான இடமான சுவிட்சர்லாந்தை மொஸ்கோ இனி போதுமான அளவு நடுநிலையாகக் காணவில்லை.

ஒப்பந்த நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பதை ரஷ்யா நிறுத்தியதாக ஓகஸ்டில் தகவல் வெளியானது.

பெப்ரவரியில் உக்ரைன் மீதான படையெடுப்பை தொடர்ந்து வோஷிங்டன் மற்றும் அதன் கூட்டாளிகளால் போடப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளையடுத்து இந்த முடிவையெடுத்ததாக மொஸ்கோ இந்த நடவடிக்கைக்கு குற்றம் சாட்டியது. இருந்தபோதிலும், ஒப்பந்தத்தின் விதிகளைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருப்பதாக ரஷ்யா கூறியது.

2011 இல் நடைமுறைக்கு வந்த புதிய தொடக்க ஒப்பந்தம், அமெரிக்காவும் ரஷ்யாவும் நிலைநிறுத்தக்கூடிய மூலோபாய அணு ஆயுதங்களின் அளவைக் கட்டுப்படுத்துகிறது, அத்துடன் நிலம் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் அடிப்படையிலான ஏவுகணைகள் மற்றும் குண்டுவீச்சு விமானங்களைப் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்துகிறது. (அ)

# கைப்பற்றப்பட்ட நிலங்களை மீள பெறுவதே முக்கிய நிபந்தனை என்கின்றது உக்ரைன்!

கீவ், நவ. 10

கைப்பற்றப்பட்ட உக்ரேனிய நிலங்கள் அனைத்தையும் திரும்பப் பெறுவதே போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தையின் முக்கிய நிபந்தனை என உக்ரைனின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.

உக்ரைனுக்கு நவீன வான் பாதுகாப்பு உபகரணங்கள், விமானங்கள், டாங்கிகள் மற்றும் நீண்ட தூர ஏவுகணை என்பன வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பெப்ரவரி மாதம் பிற்பகுதியில் ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து மேற்குலக நாடுகளிடம் இருந்து மேலதிக ஆயுதங்களுக்கு கிய்வ் பல முறை அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் உக்ரைன் ஜனாதிபதியின் முக்கிய நிபந்தனை உக்ரேனிய பிராந்திய ஒருமைப்பாட்டை மீட்டெடுப்பதாகும் என்றும் உக்ரைனின் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.

உக்ரைனின் எல்லைகளை மீட்டெடுக்க ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைக்கு தாயார் என உக்ரேனிய ஜனாதிபதி முன்னதாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளியோபட்ரா புதைக்கப்பட்டுள்ள இடம் அடையாளம் காணப்பட்டதா?


## எகிப்தில் ஆச்சரியமூட்டும் சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு

கெய்ரோ, நவ. 10

எகிப்தில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், அலெக்ஸாண்டிரியாவின் மேற்கில் உள்ள பண்டைய நகரமான டபோசிரிஸ் மாக்னாவில் உள்ள தபோசிரிஸ் மேக்னா கோயிலுக்கு அடியில் ஒரு பாறை சுரங்கப்பாதையைக் கண்டுபிடித்துள்ளனர்.

சுரங்கப்பாதை தரையில் இருந்து சுமார் 13 மீற்றர் ஆழத்தில் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது, அங்கு நாணயங்கள், தலை துண்டிக்கப்பட்ட சிலைகள் மற்றும் தெய்வங்களின் சிலைகள் உள்ளிட்ட பல கலைப் பொருட்கள் காணப்பட்டன.

கலாநிதி கத்லீன் மார்டினெஸ் தலைமையிலான சான் டொமிங்கோ பல்கலைக்கழகத்தின் எகிப்திய டொமினிகன் தொல்பொருள் பணி, கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கப்பாதையை "வடிவியல் அதிசயம்" என்று குறிப்பிட்டது.



இந்த சுரங்கப்பாதை 1,305 மீற்றர் நீளமும், சுமார் 2 மீற்றர் உயரமும் கொண்டது என்று எகிப்திய சுற்றுலா மற்றும் தொல்பொருட்கள் அமைச்சகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கலாநிதி மார்டினெஸ் இந்த சுரங்கப்பாதையின் கட்டடக்கலை வடிவமைப்பை கிரேக்கத்தின் ஜூபிலினோஸ் சுரங்கப்பாதையுடன் ஒப்பிட்டார். ஆனால் இது நீளமானது என்று அவர் கூறினார்.

இருப்பினும், தபோசிரிஸ் மேக்னா கோவிலின் சில பகுதிகள் மத்திய தரைக்கடல் நீரில் மூழ்கியுள்ளதும், பல ஆண்டுகளாக பல பூகம்பங்களால் பாதிக்கப்பட்டுள்ளதும் முழுமையான தொல்பொருள் ஆய்விற்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

கி.பி 320 -கி.பி1303 க்கு இடையில் எகிப்திய கடற்கரையில் குறைந்தது 23 நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. தபோசி ரிஸ் மேக்னா கோவிலின் ஒரு பகுதி இடிந்து கடலில் மூழ்கியது. கலாநிதி மார்டினெஸ் தலைமையிலான அகழ்வாராய்ச்சியாளர்கள், முந்தைய அகழ்வுகளின் போது, ராணி கிளியோபாட்ரா, அலெக்சாண்டர் தி கிரேட் ஆகிய இருவரின் உருவங்கள் மற்றும் பெயர்களைக் கொண்ட நாணயங்கள் உட்பட பல முக்கியமான கலைப்பொருட்களை கோவிலுக்குள் கண்டுபிடித்திருந்தனர்.

ஒரு நேர்காணலின் போது, மார்டினெஸ், எகிப்திய ராணி கிளியோபாட்ரா மற்றும் அவரது காதலர் மார்க் அன்ரனி ஆகியோரின் கல்லறைக்கு சுரங்கப்பாதை அவர்களை அழைத்துச் செல்லக்கூடும் என்று தான் உறுதியாக நம்புவதாகக் கூறினார்.

‘கிளியோபாட்ராவின் கல்லறைக்கு இது சரியான இடம்,’ என்று கூறினார். இந்த கண்டுபிடிப்பு ’21 ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான கண்டுபிடிப்பாக இருக்கும்’ என்று கூறினார்.

‘எகிப்தின் கடைசி ராணி அங்கே புதைக்கப்படுவதற்கு ஒரு சதவீத வாய்ப்பு இருந்தால், அவரைத் தேடுவது எனது கடமை’ என்று கிளியோபாட்ராவின் கல்லறை இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க பத்து ஆண்டுகளாக உழைக்கும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் விளக்கினார்.

கி.மு 12ஆம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசின் கட்டுப்பாட்டைப் பெறுவதற்காகப் போராடிய சீசரின் வாரிசான ஆக்டேவியனிடம் கிரேக்கத்தில் நடந்த போரில் தோல்வியடைந்த பின்னர் கிளியோபாட்ராவும் மார்க் அன்ரனியும் இறந்தனர். இருவரும் தற்கொலை செய்து கொண்டதாக சிலர் நம்புகிறார்கள், ஆனால் அவர்களின் கல்லறைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. (அ)

ஈழநாடு



# பாபர், றிஸ்வான் மிரட்டல் அடி; இறுதியாட்டத்தில் பாகிஸ்தான்!






சிட்னி, நவ. 10

பாபர் அஸாம், முஹமது றிஸ்வானின் அதிரடி ஆட்டமும் சகீன் அப்ரிடியின் அபாரமான பந்துவீச்சும் கைகொடுக்க நியூசிலாந்து அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டு உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கு முன்னேறியது பாகிஸ்தான் அணி.

அவுஸ்திரேலியாவில் நடக்கும் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியின் முதல் அரையிறுதிப் போட்டி நேற்று சிட்னியில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்றி நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி, முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தானுக்கு 153 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நிர்ணயித்தது.

தொடக்கம் வீரர்களாக முஹமட் றிஸ்வான், அணித் தலைவர் பாபர் அஸாம் இணை களமிறங்கியது. ஆரம்பம் முதலே இருவரும் அதிரடியாக ஆடினர். 105 ஓட்டங்களை இருவரும் முதல் விக்கெட்டுக்காக சேர்த்த நிலையில், பாபர் அஸாம் 42 பந்துகளில் 7 பௌண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

முஹமட் றிஸ்வான் 43 பந்துகளில் 5 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

முஹமட் ஹாரிஸ் 30 ஓட்டங்களை 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் எடுத்தார். பாகிஸ்தான் அணி 19.1 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஷான் மசூத் 3 ஓட்டங்களுடனும், இப்திகார் அஹமட் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் போல்ட் 2 விக்கெட்களையும், மிற்செல் சாண்ட்னர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு பின் அலன், டெவன் கொன்வே தொடக்கம் கொடுத்தனர். முதல் ஓவரை வீசிய பாகிஸ்தானின் சகீன் அப்ரிடி 3ஆவது பந்திலேயே அலனை எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க செய்தார். அப்போது அவர் 4 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

கொன்வேயுடன் இணைந்த அணித் தலைவர் வில்லியம்சன் நிதானம் காட்டி ஆடினார். இருவரும் நிதானமாக ஆடியதால் ஓட்ட எண்ணிக்கை மெதுவாக - ஆனால் பந்துக்கு சமானமாகவே உயர்ந்தது.

இந்நிலையில் கொன்வே 21 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆகி வெளியேற, அடுத்து வந்த கிளென் பிலிப்ஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த டரில் மிற்செல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனிடையே, கேன் வில்லியம்சன் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

20ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 152 ஓட்டங்களை எடுத்திருந்தது.

டரில் மிற்செல் 35 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 53 ஓட்டங்களையம் ஜேம்ஸ் நீசம் 16 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் சகீன் அப்ரிடி 2 விக்கெட்களையும், முஹமட் நவாஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக முஹமட் றிஸ்வான் தெரிவானார்.

இன்று இங்கிலாந்து - இந்திய அணிகள் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மோதுகின்றன.

(ஐ)




# பந்துவீச்சாளருக்கான தரவரிசை: இலங்கையின் ஹசரங்க முதலிடம்!

டுபாய், நவ. 10

பந்துவீச்சாளர்களுக்கான ஐ. சி. சி. இருபது - 20 தரவரிசையில் இலங்கை சுழல்பந்து வீச்சாளர் ஹசரங்க முதலிடம் பிடித்துள்ளார்.

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடிய 8 போட்டிகளில் 15 விக்கெட்களை எடுத்துள்ளார் இலங்கை சுழல்பந்து வீச்சாளரான ஹசரங்க.

இதையடுத்து பந்துவீச்சாளர்களுக்கான ஐ. சி. சி. இருபது - 20 தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ரஷித் கானை பின்னுக்குத் தள்ளி ஹசரங்க முதலிடம் பிடித்துள்ளார். இதற்கு முன்பு நவம்பர் 2021இல் இருபது - 20 தரவரிசையில் முதலிடம் பிடித்தார் ஹசரங்க.

இதேசமயம், ஹசரங்க சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மற்றோர் இலங்கை வீரரான மஹீஷ் தீக்ஷன 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தனுஷ்க மீதான வழக்கு ஒத்திவைப்பு

சிட்னி, நவ. 10

அவுஸ்திரேலியாவில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, அந்நாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் தனுஷ்க குணதிலக மீதான வழக்கு விசாரணை 2023 ஜனவரி 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது சிட்னியில் உள்ள புளூ வோட்டர்ஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனுஷ்க குணதிலக்கவுடன் காணொளி தொழில்நுட்பம் ஊடாக தொடர்பு கொள்ளப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

அத்துடன், இந்த வழக்கை ஊடகங்களுக்கு வெளிப்படுத்த வேண்டாம் என்ற கோரிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.







# தேசிய கராத்தே போட்டி வடக்குக்கு 7 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ. 10

விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய கராத்தே போட்டியில் வடக்கு மாகாணம் 2 வெள்ளி, 5 வெண்கல பதக்கங்களை வென்று சாதித்துள்ளது.

கடந்த 4, 5, 6ஆம் திகதிகளில் கண்டி மாநகர உள்ளக விளையாட்டரங்கில் நடந்த இந்தப் போட்டியில் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் இல்லத்தை சேர்ந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவிகளான கு. சாளினி (16 வயது பிரிவு), த. கௌசிகா (18 வயது பிரிவு), த. சானுஜா (20 வயது பிரிவு) குழுச் சண்டை போட்டியில் வெண்கல பதக்கங்களை வென்றனர்.

இதே இல்லத்தை சேர்ந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் உ. றமேஸ்ராஜா (57 கிலோ -20 வயது பிரிவு -) குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

செஞ்சோலை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் ஜெ. துளசிமாறன் (-67 கிலோ - 20 வயது பிரிவு) வெண்கலப் பதக்கம் வென்றார்.

யாழ். மத்திய கல்லூரி மாணவன் சூ. கலையினியன் (-67 கிலோ - 20 வயது பிரிவு) குமித்தே போட்டியில் வெண்கலத்தையும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வி. நிவேதன் (67 வயது - 20 வயது பிரிவு) குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்று சாதித்தனர்.

இவர்கள் அனைவரும் சர்வதேச சக்குறா சோட்டோகன் கராத்தேச சங்கத்தின் பிரதம ஆசிரியர் சென்சே கே. எஸ். விஜயராஜின் மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தேர்தலை பிற்போட்டால் சட்டப் போர் வெடிக்கும்!

## லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரிக்கை

கொழும்பு, நவ. 10

"கடந்தகால சம்பவங்களிலிருந்து இந்த அரசாங்கம் இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிக்கின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம். அரசியல் முயற்சியை தோற்கடிக்க நாட்டிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் சட்டப்போரை முன்னெடுப்பார்கள்."

- இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுயாதீன ஆணைக்குழுக்கள் பற்றி நீதி அமைச்சர் கதைக்கின்றார், இதற்கிடையில் சபாநாயகரின் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழு நியமனத்தில் அரசாங்கம் அவசரம் காட்டுவது குறித்து எமக்கு சந்தேகம் உள்ளது. தேர்தலை பிற்போடுவதற்கான நகர்வாகக்கூட இருக்கலாம்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு தமக்கு சார்பானவர்களை உள்வாங்கி, அதன்மூலம் தேர்தலை ஒத்திவைக்க திட்டம் வகுக்கலாம். புதிய தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை, தற்போது உள்ளவர்கள் பதவியில் தொடரலாம் என சட்டம் உள்ளது.



எனவே, தேர்தலை பிற்போட்டு ,அடக்குமுறையை கையில் எடுக்க அரசாங்கம் முற்பட்டால், நாட்டில் உள்ள அனைத்து சட்டத்தரணிகளும் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவார்கள். தேர்தலை பிற்போட நாம் இடமளிக்க மாட்டோம் - என்றார். (அ)

# கர்ப்பிணி ஆசிரியையின் உயிரைப் பறித்த விபத்து

கொழும்பு, நவ. 10

கஹடகஸ்திகிலிய - ரத்மல் கஹா வெவ பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளும் பஸ் ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த 23 வயதுடைய பெண்ணின் கணவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கஹடகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கணவருடன் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, மதவாச்சியில் இருந்து வந்த பஸ் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

உயிரிழந்த பெண் கஹடகஸ்திகிலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக கடமையாற்றுகிறார்.

கஹடகஸ்திகிலிய - கிரிபெவ பிரதேசத்தில் வசித்து வருபவர் எனவும் கூறப்படுகிறது.

உயிரிழந்த பெண்ணின் கணவர் படுகாயமடைந்த நிலையில் கஹடகஸ்திகிலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹடகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டனர். (அ)

# ஒரு மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களுக்கு காலை உணவு

கொழும்பு, நவ. 10

1 மில்லியனுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நன்கொடையாளர்களின் உதவியுடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் தற்போது இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அதன்படி, 26 வீத பாடசாலை மாணவர்களுக்கு தற்போது காலை உணவு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# குரங்கு காய்ச்சலால் கர்ப்பிணிகளுக்கு கருக்கலைப்பு ஏற்படக்கூடிய அபாயம்!

கொழும்பு, நவ. 10

குரங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கு முறையான கை கழுவுதல் மற்றும் சுத்தப்படுத்துதல் மிகவும் முக்கியம் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் ஆலோசகர் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேற்கூறிய முறைகள் அடிப்படைத் தடுப்பு முறையாகப் பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

8 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டால், அது தீவிரமாக இருக்கும் என்றும் மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கருக்கலைப்பு ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

பெரியம்மை மற்றும் சின்னம்மைக்கு இடையில் உள்ள ஒரு வைரஸ் குரங்கு வைரஸ் என்றும் அது கொப்புளங்களாகத் தோன்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குரங்கு அல்லது பெரியம்மைக்கு எதிரான தடுப்பூசி நாட்டில் இல்லை என்றும் எனவே அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பேணுவது மிகவும் முக்கியம் என்றும் அவர் கூறினார்.

இந்த நோய் தோலில் இருந்தும் வாய் உட்பட சாதாரண தொடர்புகள் மூலமாகவும் பாலியல் தொடர்பு மூலமாகவும் பரவக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் தங்கள் நெருங்கிய தொடர்புகளை 21 நாட்கள் வரை கண்காணிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் பயன்படுத்தும் அதே படுக்கை, துண்டு அல்லது படுக்கை துணியால் கூட வைரஸ் பரவக்கூடும் என்றும் அவர் கூறினார்.

எனவே, வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க முறையான கை கழுவுதல் மற்றும் தூய்மை மிகவும் அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, காய்ச்சலுடன் கூடிய சொறி, தோல் புண் போன்ற குரங்கு காய்ச்சலைப் போன்ற அறிகுறிகள் இருந்தால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கோ அல்லது வேறு எந்த பொது இடத்திற்கோ அனுப்ப வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார். (அ)

# இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 458 கிலோ கஞ்சா நெடுந்தீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 10

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 458 கிலோ கஞ்சா நெடுந்தீவுக் கடலில் நேற்று புதன்கிழமை காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நெடுந்தீவுக் கடலில சந்தேகத்திற்கிடமாக பயணித்த படகை வழிமறித்த கடற்படையினர் அதில் எடுத்துச் சென்ற 458 கிலோ கஞ்சாவையும் கைப்பற்றினர். இதன்போது கஞ்சாவை எடுத்து வந்த இரு படகோட்டிகளும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் மண்டைதீவைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.



இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சந்தேக நபர்களுடன் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர். (அ)

# யாழ். மத்திய பஸ் நிலையத்தின் அதிகாரியை மாற்ற கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியில் உள்ளவரை இடம் மாற்றி பொருத்தமான - தகுதி நிலையுடைய ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும் என்று வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்து தொழிற்சங்கங்களும் கோரியுள்ளன.

தற்போது மத்திய பஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியில் உள்ளவர் பக்கச்சார்பாக செயல்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வடபிராந்திய போக்குவரத்து சபையின் 7 சாலைகளின் தொழிற்சங்கங்கள் கோரிக்கை மனு ஒன்றை வெளியிட்டுள்ளன.

தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் வழங்கப்படாதுவிடின் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்க நேரிடும் என்றும் அந்த சங்கங்கள் எச்சரித்துள்ளன.

அத்துடன், தமது மனுவை இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் உள்ளிட்ட நிர்வாக அதிகாரிகளுக்கும் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் 7 சாலைகளின் தொழிற்சங்க தலைவர்களும் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளன. (ஐ-03)

# மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணம்!

கொழும்பு, நவ. 10

காலி ஜின்தோட்டை பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் கடலில் நீராடச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவின்ன அரபிக் பாடசாலையில் கல்வி கற்கும் காலி ஹிரிம்புரையைச் சேர்ந்த மொஹமட் மொஹமட் யூசுப் (வயது 14) மற்றும் காலி மொரகொடையைச் சேர்ந்த மொஹமட் மில்ஷான் (வயது-15)ஆகிய இரு மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த இரண்டு மாணவர்களும் தாங்கள் படிக்கும் அரபு பாடசாலைக்கு விடுமுறை விடுவதால் ஜின்தோட்டை முகத்து வாரத்துக்கு அருகில் உள்ள கடலில் நீராட சென்றுள்ளனர். அவ்வாறு நீந்திக் கொண்டிருந்த இருவரும் நீரில் மூழ்கியதையடுத்து, பிரதேசவாசிகள் இணைந்து மீட்பு முயற்சியில் ஈடுபட்டனர்.

அரை மணி நேரத்தின் பின் அவர்கள் மீட்கப்பட்டனர்.

அதற்குள் ஒருவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததுடன் மற்றைய மாணவர் கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (அ)

## அனைத்துத்...

பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

மேலும், "தமிழர்களின் அரசியல் நிலை பின்னோக்கிச் செல்லும் விதத்தில்தான் உள்ளது. எங்களுக்குள் ஒற்றுமை மிகவும் அவசியம். ஆனால், அதற்கு நாங்கள் எப்போதும் இடம் கொடுப்பதில்லை. எங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளையும் வேற்றுமைகளையும் கூறிக்கொண்டு எங்களுக்குள்ளேயே பிரச்னைப்பட்டுக் கொண்டிருக்கின்றோமே தவிர, மக்களுக்கு என்னென்ன தேவை என்பது தொடர்பில் நாங்கள் நினைப்பதில்லை.

இப்போது நாங்கள் அரசியல் பேசத் தொடங்கி வெறும் பேச்சாகவே எங்களுடைய அரசியல் போய்க்கொண்டிருக்கின்றது. நான் சுமந்திரன் எம். பிக்குப் பாராட்டுத் தெரிவித்து ஒரு மின்னஞ்சல் அனுப்பியுள்ளேன். அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்துக்குச் சுமந்திரன் எம். பி. வழங்கிய பதிலுக்காக.

'வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தலைவர்கள் தங்களுக்குள் கட்சிகள், அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தேசிய இனப் பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே ஒரே வழி என்பதில் மிக உறுதியாகவும், ஒருமித்த நிலைப்பாட்டிலும் உள்ளனர். எனவே, தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டிருக்கின்றார்கள் என்று சாக்குப்போக்குக் கூறி, சமாளிப்பதை விடுத்து, சமஷ்டி தீர்வுக்கு வழி பாருங்கள்' என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நல்ல பதிலை வழங்கியுள்ளார் சுமந்திரன் எம்.பி.

நான் சுமந்திரன் எம்.பிக்குப் பாராட்டுத் தெரிவித்து அனுப்பிய மின்னஞ்சலுக்கு அவர் உடனே நன்றி தெரிவித்து எனக்குப் பதில் அனுப்பியுள்ளார். எங்களுக்குள் இருப்பவர்கள் என்ன நன்மையைச் செய்தாலும் நாங்கள் அதைப் பாராட்டுபவர்களாவே இருக்க வேண்டும்.

எந்த நேரமும் எங்களுடைய மக்கள் மத்தியில் அவர் முன்னுக்குச் செல்லக்கூடாது என்ற எண்ணத்தில் நாங்கள் வளர்ந்தோமானால் எந்தக் காலத்திலும் தமிழர்களுக்கான விடிவை நோக்கிச் செல்ல முடியாது. ஆகவே எங்களுக்குள் ஒற்றுமை மிகவும் அவசியம்.

அந்த ஒற்றுமை இல்லாத காரணத்தாலேயே தமிழர்களின் அரசியல் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலையில் உள்ளது. வெகுவிரைவிலே தற்போதைய நிலையைப் பார்த்து - தற்போதைய சூழலைப் பார்த்து - பின்புலத்தைப் பார்த்து நாங்கள் அனைவரும் ஒற்றுமையடைய வேண்டிய கட்டம் வரும் என்பது என்னுடைய கருத்து" - என்று ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 3 வயது...

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரம்பொன் வசித்து வந்த வாய் பேச முடியாத பெண் ஒருவரை, இதே பகுதியை சேர்ந்த ஒருவர் நான்கு வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளார்.

திருமணம் செய்து ஒரு வருடத்தின் பின்னர் அந்த பெண்ணை அவர் பிரிந்து சென்றுள்ளார். அவர்களுக்கு 3 வயதில் பெண்குழந்தை ஒன்றும் உள்ளது.

இந்நிலையில், ஒரு வாரத்துக்கு முன்னர் வந்தவர், சேர்ந்து வாழ்வோம் என்று கூறி மனைவியையும் பிள்ளையையும் சுருவில் பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். இருவரும் 5 நாட்கள் சேர்ந்து வாழ்ந்துள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி அந்த நபர் தகராறு தொடர்பான வழக்கு ஒன்றுக்காக ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு சென்றுள்ளார். அன்றைய தினம் மாற்று ஆற்றலுடையோருக்கான வட்ஸ் அப் குழுவில், தனது மகளை தாக்கும் காணொலியை வெளியிட்ட அவர், தனது மனைவியின் மரண அறிவித்தலையும் பகிர்ந்துள்ளார்.

இவை இரண்டும் சமூகவலைத்தளத்தில் பரவின. இவற்றைப் பார்த்த ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ஊர்கவாற்றுறை நீதிவானின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதையடுத்தே அந்த நபரை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, மரண அறிவித்தல் வெளியிடப்பட்ட பெண் உயிருடன் உள்ளாரா அல்லது இல்லையா, தாயும் குழந்தையும் இப்போது எங்கே என்ற விவரங்கள் எவையும் வெளிவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாராளுமன்றத்தில்...

பாராளுமன்றத்தின் செயல்பாடுகளில் மந்த நிலை காணப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அண்மையில் எழுதியிருந்தார். இந்த விடயமே நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் கடும் விமர்சனத்தை உருவாக்கியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா, லக்ஷ்மன் கிரியெல்ல ஒழுங்கு பிரச்னையை முதலில் எழுப்பினர்.

"பாராளுமன்றத்தில் குற்றம் கண்டுபிடிக்க ஜனாதிபதிக்கு உரிமை இல்லை. அரச ஆவணங்களை தாக்கல் செய்யத் தவறியதால்தான் பாராளுமன்றத்தில் தாமதம் ஏற்பட்டது என்று நீங்கள் கூறுவதுதான் சரிதான். சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்த ஒப்பந்த நகலை நாம் கேட்டு வருகிறோம். இன்னமும் அது எமக்கு கிடைக்கவில்லை என்று கிரியெல்ல இதன்போது குறிப்பிட்டார்.

இதேசமயம், புத்திக பத்திரண எம். பி., "ஜனாதிபதி சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தை அச்சுறுத்தலாகவே காண்கிறேன். அரசமைப்பின்படி அரசாங்கத்தின் அமைப்புகளிடையே சோதனைகள் மற்றும் சமநிலைகள் இருக்க வேண்டும். எனவே நிறைவேற்று அதிகார சபையுடன் மோதலுக்கு செல்லமுடியாது. ஜனாதிபதியின் கடிதம் கவலையளிக்கிறது" - என்றார். (ஐ)

## ஐ. எம்....

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அத்துடன்,

"சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்பாடு, அந்த உடன்படிக்கையில் காணப்படுகின்ற உள்ளடக்கங்கள், விடயங்கள், அதனுடைய முக்கியமான விடயங்கள் ஏன் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஏன் இதனை மறைத்துக் கொண்டு இருக்கின்றீர்கள்? வங்குரோத்து அடைந்த எமது நாட்டில் அரசாங்கமானது மக்கள் வாழ்க்கையில் விளையாடிக்கொண்டு இருக்கின்றது.

கேட்கும்போது உடன்படிக்கை இல்லை என்று கூறுகின்றார்கள். இருப்பினும் வரி விதிக்கும்போது சர்வதேச நாணயத்தின் கோரிக்கைக்கு அமையவே வரிவிதிக்கப்படுவதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளையே நடைமுறைப்படுத்துவதாகக் கூறுகின்றார். உண்மையில் இதனுடைய அர்த்தம் என்ன? ஊழியர் மட்ட உடன்படிக்கை ஒன்று உள்ளதா இல்லாவிட்டால் நாட்டுக்கு பொய் உரைக்கின்றாரா?

மின் கட்டணத்தை அதிகரிக்கும்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் என்று கூறுகின்றார்கள். எரிவாயு விலையை அதிகரிக்கும்போது அதனையே கூறுகின்றனர். சர்வதேச நாணய நிதித்தின் நிபந்தனைக்கு அமைவாகவா உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றது?

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளா இவைகள்? எதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை சபாபீடத்துக்கு சமர்ப்பிக்க முடியாது?

இவ்வாறான இரகசியத் தன்மைகளினூடாக ஏன் நாட்டை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றீர்கள்? உடன்படிக்கைகள் தொடர்பிலான விடயங்களை மறைப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது" - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்துக்கு பதில் பேராயர்!

யாழ்ப்பாணம், நவ. 10

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனப் பேராயராக இருந்த வண. டானியல் தியாகராஜா நேற்று முன்தினத்துடன் ஓய்வு பெற்றார்.

புதிய பேராயர் எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தில் நியமிக்கப்படுவார் என்று அறிய வருகிறது. அதுவரை, நிர்வாக விடயங்களை கையாள்வதற்காக தலைமை பேராயர் தனது பிரதிநிதியாக திருச்சி-தஞ்சாவூர் ஆதீனப் பேராயர் அதிவண. கலாநிதி தன்ராஜ் சந்திரசேகரை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற பேராயர். வண.



டானியல் தியாகராஜா கடந்த 16 வருடங்கள் பேராயராக இருந்து சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் யாழ்ப்பாணம் ஊடாக கடக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

இலங்கைக்கு தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது. இது வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதியளவில் யாழ்ப்பாணத்துக்கு வடக்காக இந்தியாவின் தமிழ் நாட்டின் நாகப்பட்டினத்துக்கு அண்மையாக கரையை கடக்கு மென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி தெரிவித்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா.

மேலும், இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தினால் ஏற்படும் காற்றால் சேதம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும்.

இந்த தீவிர தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 14 திகதி வரை திரட்டிய மழையாக 250 மில்லிமீற்றருக்கு மேல் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

## மேற்கு...

மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகள் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கும் 34 வீத பங்குகள் ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கும் மற்றைய 15 வீத பங்குகள் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையிடமும் உள்ளன. நிர்மாணப் பணிகளை மூன்று வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க் கப்படுகின்றது.

## 81 மாணவர்...

துரலிய ரதன தேரரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் இவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையான வர்களுக்கான புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

ஐஸ் போன்ற மிகவும் ஆபத்தான போதைப்பொருட்களுக்கு எதிரான நட வடிக்கைகளை எடுப்பதற்கு தற்போதைய சட்டங்கள் போது மானவையாக இல்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 26,000 அரச...

சேவைக்கு உள்வாங்கப்பட்ட, பணிகளுக்கு அமர்த்தப்படாத மேலதிக ஊழியர்களை இவ்வாறு ஆசிரிய சேவையில் இணைக்கப் படவுள்ளனர் என்று அவர் நேற்றுப் புதன் கிழமை பாராளுமன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேலும், 26,000 ஆசிரியர்களை சேவை யில் இணைக்கும் நோக்கில் பொது போட் டிப் பரீட்சை நடத் தப்படவுள்ளது. பொது அறிவு, உளநல பரீட்சைகளின் புள்ளிகள் அடிப்படையில், ஆசிரியர் குறைபாட்டை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என் றும் அவர் கூறினார். (ஐ)

## எம். சி. சி....

சாங்கத்துக்கு உண்டு. மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து இதுவரை பேச்சு எதுவும் நடத்தப்படவில்லை. எனினும், ஒப் பந்தம் தொடர்பில் தீர்மானிக்கும் முடிவை ஜனாதிபதி அல்லது அமைச்சரவை எடுக்க முடியும். இது அவர்களின் பொறுப்பாகும் - என்றார்.

2020 டிசெம்பரில் எட்டப்பட்ட உடன் பாட்டின்படி இலங்கைக்கு இந்த ஒப்பந்தம் மூலம் 89 பில்லியன் அபிவிருத்தி உதவி நிதி கிடைக்கும். இது வறுமையை குறைக்க வும் - பொருளாதாரத்தை வளர்க்கவும் உதவும் என்று கூறப்படுகின்றது.

## குரங்கு...

டுபாயில் இருந்து வந்த நபர் ஒருவரே அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை...

மற்றும் அரசாங்க பங்குதாரர்களை சந்திப் பார் என இலங்கையில் உள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

லோர்ட் டேவிஸ் இங்கிலாந்து - இலங்கை பொருளாதார கூட்டுறவின் பரஸ்பர வளர்ச்சியை ஆதரிப்பதில் கவனம் செலுத் துவார்.

அத்துடன், இலங்கை - இங்கிலாந்து பங்குதாரர்களுக்கான உயர் மட்ட அணுகல் மூலம் இங்கிலாந்தின் வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நோக்கங்களை லோர்ட் டேவிஸ் ஆதரிப்பார். இரு நாடுகளுக்கும் நன்மைகளை கொண்டு வரும் ஒப்பந்தங்களை ஊக்குவிப்பதற்காக இங்கிலாந்து வணிகங்களுக்கு கதவுகளை இவரின் வருகை திறக்கும் என்று கூறப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டு இலங்கைக்கான தனது வர்த்தக தூதராக அபர் சோக் பிரபு டேவிஸ் என்பவரை முன்னாள் இங்கிலாந்து பிரதமர் பொறிஸ் ஜோன்சன் நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சுப் பதவி தந்தால் ஏற்பேன்!

## கூறுகின்றார் எஸ்.பி.

கொழும்பு, நவ. 10

‘ அமைச்சு பதவி வழங்கப்பட்டால் அதனை பொறுப்பேற்பதற்கு தயாராகவே இருக்கின்றேன்.” - என்று மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி எனவும் அவர் கூறினார்.

(அ)

# மரண அறிவித்தல்



## திருமதி ஈஸ்வரி கணேசமூர்த்தி

யாழ். உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா பிரிஸ்பேனை வதிவிடமாகவும் கொண்ட ஈஸ்வரி கணேசமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) நேற்றுமுன்தினம் (08.11.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், ஸ்ரீவிக்கினேஸ்வரன், கலைமகள் மற்றும் திருமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலன், யசோதரையின் அன்பு மாமியாரும் மயூரன், சரணியாவின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சற்குணேஸ்வரி , மகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அகிலாம்பிகை , சாவித்திரி , புஸ்பவதி மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் வரதன் (கனடா), திரிபுரசுந்தரி (கனடா) ஆகியோரின் மாமியாரும் சிவகாமி (இந்தியா), ரேவதி (சிட்னி) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 13.11.22 ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை Centenary Memorial Gardens இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

353, Wacol Station Road
Summer
Summer QLD 4074

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
**ஸ்ரீவிக்கினேஸ்வரன் (மகன்) -**
**(+61) 0427 391 446** (அவுஸ்திரேலியா)
**விமலன் (மருமகன்)**
**(+61) 0408757756** (அவுஸ்திரேலியா)





# வியட்நாம் படைத் தளங்களில் இலங்கை அகதிகள் தங்கவைப்பு

## கப்பலை விட்டு இறங்க சிலர் பின்னடித்தனர் எனத் தகவல்

ஹோசிமின்,நவ.10

ஜப்பானியக் கப்பல் ஒன்றினால் காப்பாற்றப்பட்ட இலங்கை அகதிகள் 303 பேரும் நேற்றுமுன்தினம் அந்தக் கப்பலில் இருந்து பகுதி பகுதியாக இறக்கப்பட்டு கடற்படைக் கப்பல்கள் மூலம் வியட்நாம் நாட்டின் வுங் தோ நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களை அங்கு கரையோரக் காவல் படை முகாமிலும் இராணுவத் தளங்களிலும் உள்ள வாடி வீடுகளில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று வியட்நாம் செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்தது.

வுங் தோ நகரில் உள்ள பா றியா மாவட்டத்தில் எல்லைப் படைக் கட்டளை மையத்திலும் டட் டோ மற்றும் யுவைன் மொக் மாவட்டங்களில் உள்ள வியட்நாமிய படைத் தளங்களிலும் அகதிகள் தங்கவைக்கப்படவுள்ளனர்.

சேதமடைந்த மீன் பிடிக் கப்பல் ஒன்றில் இருந்து ஜப்பானுக்குச் சொந்தமான ”ஹெலியோஸ் லீடர்” என்ற கப்பலுக்கு மாற்றி ஏற்றப்பட்ட அகதிகள் அங்கு வைத்து மருத்துவக் குழு ஒன்றினால் பரிசோதிக்கப்பட்டனர்

அவர்களில் சிலருக்கு நெரிசல் காரணமாகச் சிறு காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றும் பெரும்பாலும் அனைவரும் ஆரோக்கியமான நிலையில் காணப்படுகின்றனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பின்னர் அவர்கள் அதிலிருந்து கடற்படைக் கப்பல்களுக்கு மாற்றப்பட்டனர்.

முதல் தொகுதியாக 155 அகதிகளை ஏற்றிய கடற்படைக் கப்பல் நேற்று முன் தினம் இரவு வியட்நாம் நேரப்படி 20.10 மணிக்கு துறைமுகத்தை வந்தடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. தங்கள் பொதிகள் மற்றும் குழந்தைகளுடன் காணப்பட்ட அகதிகள் முதலில் கப்பலை விட்டுத் துறைமுகத்தில் இறங்குவதற்குப் பின்னடித்தனர் என்றும், அதிகாரிகள் அவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் விளக்கம் அளித்த பிறகே அவர்கள் இறங்குவதற்குச் சம்மதித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. துறைமுகத்தில் இறக்கப்பட்ட அகதிகள் அங்கிருந்து பஸ்கள் மூலம் தங்குமிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அகதிகள் அனைவருக்கும் ஆரம்ப கட்டமாக அவசர உதவிகளை வழங்கி அவர்களை இருப்பிடங்களில் தங்க வைப்பதே தங்கள் முதல் பணி என்றும் அதன் பின்னர் வியட்நாமுக்கான இலங்கைத் தூதரகத்துடன் மாகாண அதிகாரிகள் தொடர்பு கொண்டு அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு வங் தோ மாகாணத்தின் பா றியா பகுதி மக்கள் குழுவின் உதவித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

(அ)

# தேர்தலைப் பிற்போட்டால் அரசு மீது சட்ட நடவடிக்கை

## சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 10

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட்டால் அரசாங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே ஐக்கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடாமல் நடத்தப்படவேண்டும். இதற்கான நடவடிக்கையை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேற்கொள்வார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் பிற்போட்டால் வழக்கு தாக்கல் செய்வோம்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்து உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட தற்போது சதித் திட்டங்களை தீட்டி வருகின்றது.

எவ்வாறாயினும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பரிய, தன் மீது மக்கள் வைத்திருக்கும் மதிப்பை பேணவேண்டும் - என்றார். (அ)

# திருக்கோணேஸ்வரம் நூல் அறிமுக விழா!

திருகோணமலை, நவ. 10

யாழ். பல்கலைக்கழ வேந்தர் தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய திருக்கோணேஸ்வரம் நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

திருகோணமலை நகர சபை நூலகத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு சட்டத்தரணி துஷ்யந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை ஓய்வு பெற்ற அதிபரும் ஊடகவியலாளருமான திருமலை. நவம் ஆற்றவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மேனாள் பேராசிரியர்கள் சி. சிவலிங்கராஜா, ப. புஷ்பரெட்ணம், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குணபாலசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

(ஐ)

# கந்தக்காட்டில் தப்பியோடிய 13 பேர் சரணடையவில்லை!

கொழும்பு, நவ. 10

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் அண்மையில் இடம்பெற்ற மோதலின் போது தப்பிச் சென்ற 13 கைதிகள் இதுவரை சரணடையவில்லை என பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த 6ஆம் திகதி இரவு ஏற்பட்ட மோதலின்போது 50 தொடக்கம் 100 வரையான கைதிகள் முகாமிலிருந்து தப்பிச் சென்றனர்.

மோதலின் பின்னர் இதுவரை 301 கைதிகள் மீண்டும் புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் மேலும் கூறினார்.

மோதலில் ஈடுபட்ட 215 கைதிகள் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மோதலின் போது தப்பியோடிய 14 கைதிகள் புலதிசிபுர மற்றும் சேருநுவர பொலிஸ் நிலையங்களில் இருப்பதாகவும், காயமடைந்த 04 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பிரிகேடியர் ரவி ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

எனினும், தப்பியோடிய 13 கைதிகள் இன்னும் சரணடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.